JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. ii.] நவம்பர் ௴ 1890. [புஸ்த. XXI.

CONTENTS.

Which is the more happy, a Barbarous, or a Civilized, man?—A discussion between two sets of Philosophers in the Court of a Sovereign.................... 241

Catechism on various subjects (*Continued*):—(*The connection between the five Senses and Dreams, &c.*)........................ 248

Forbearance and Forgiveness:—A number of anecdotes illustrative of these qualities......... 254

The origin of early marriages... 261

Scientific and historical explanations of a few ceremonies connected with Hindu marriages (*Conclusion*)................ 263

News and Notes...................... 264

அட்டவணை.

நாகரீகரா அநாகரீகரா விசேஷ சுகமுடையார்?—ஓர் அரசன் சமஸ்தானத்தில் இருவகையான தத்துவ சாஸ்திரிகளுக்குள் நடந்த வாக்குவாதம்......................... 241

விவிதவிஷயவிளக்கவினாவிடை (தொடர்ச்சி):—(ஐம்பொறிகளுக்கும் கனவுகளுக்குமுள்ள சம்பந்தம் முதலியவை)..................... 248

பொறையுடைமையும் மன்னிக்கு மியல்பும்:—இக்குணங்களை விளக்கும் சில விர்த்தாந்தங்கள் ...... 254

பாலியவிவாகத்திற்கு மூலகாரணம். 261

இந்துவிவாகச்சடங்குகள் சிலவற்றின் சாஸ்திரோக்த சரித்திர பூர்வக விவரணம் (முடிவு)...... ..... 263

வர்த்தமானக் குறிப்பு................ 264

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

# ஜநவிநோதிநி.

இல. 11.] நவம்பர் மீ 1890. [புஸ்த. XXI.

## நாகரீகரா அநாகரீகரா விசேஷசுகமுடையார்?

எல்லாவளங்களும் நிறையப்பெற்ற இரத்னபுரமென்னும் நகரத்தை இராஜதானியாகக்கொண்டு தனியரசுபுரிந்துவந்த பத்மநாபனென்னும் அரசன் தன்னுடைய சமஸ்தானத்தில் வித்வசிரோன்மணிகளாகிய சாஸ்திரிகள் பலரையும் ஆதரித்துவந்தானென்றும், தனக்கு ஒவ்வோர்காலத்தில் நேரிடும் சந்தேகங்களை அவர்கள்முன்னிலையிற்கூறி அவர்கள் முறையே தெரிவிக்கும் அபிப்பிராயங்களைச் சீர்தூக்கிப்பார்த்துத்தெளிவுபெற்று வந்தானென்றும் இப்பத்திரிகையை வாசித்துவரும் பலர்க்கும் தெரிந்தேயிருக்கிறது. கல்விப்பொருளினாலும் செல்வப்பொருளினாலும் மிக்கநாகரீகமடைந்து சௌக்கியமாய் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுடையும் சுகத்தையும், நாகரீகமற்றவர்களாய்ப் பசி முதலிய தேக உபாதைகள் நேர்ந்தபோது கிடைக்கும்பொருள்களினால் அவற்றையொழித்துக்கொண்டு மனக்கவலையற்றுச் சுவயேச்சையாய் வனமுதலிய விடங்களில் திரிந்துகொண்டிருக்கும் மிலேச்சர்களுடையும் சுகத்தையும் ஒத்திட்டுப்பார்க்கையில் இவ்விருதிறத்தாருக்குள்ளே எவருடையும் சுகம் விசேஷப்பட்டதாயிருக்கலாமென்னும் சந்தேகம் ஒருநாள் பத்மநாபனுடைய மனதில் தோன்ற, அவன் தன்சபையிலிருந்த புலவர்களைவிளித்துத் தனக்குண்டாகியசந்தேகத்தைத்தெளிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதுகேட்ட சாஸ்திரிகள் யாவரும் தமக்குள்ளே சிறிதுநேரம் யோசித்தபிறகு சிலர் ஒருமாதிரியாகவும் வேறு சிலர் வேறுமாதிரியாகவும் அபிப்பிராயப்பட்டபடியால் அவ்விருவகையான அபிப்பிராயங்களையும் முறையே தெரிவிப்பதற்காகச் சதானந்தரென்பவரையும் சவுந்தரரென்பவரையும் தமக்குப் பிரதிநிதிகளாக நியமித்துப்பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். உடனே சதானந்தர் அடியில்வருமாறு கூறலாயினர்:—

மன்னரேறே! கல்வி-செல்வம் இவற்றின் மிகுதியினாலே ஒருவன் எவ்வளவு விசேஷமாக நாகரீகமடைந்து சிறப்புற்றோங்குவானாயினும் அவனுக்கு மனக்கவலைகளிராமற்போகா. ஒருவன் எவ்வளவுதூரம் நன்றாய்ச் சாஸ்திரங்களையுணர்ந்தானாயினும்,

> "கற்றதுகைம்மண்ணளவுகல்லாதுலகளவென்
> றுற்றகலைமடந்தையோதுகிறாள்-மெத்த
> வெறும்பந்தயங்கூறவேண்டாம்புலவீ
> ரெறும்புந்தன்கையாலெண்சாண்."

என்னும் செய்யுளிலடங்கிய கருத்துக்கிணங்க, அந்தோ! நாம் இன்னும்கற்கவேண்டுவது அளவற்றிருக்கின்றதே யென்னுமெண்ணம் அவனுடையமனதிற்றோன்றியமாத்திரத்தில், அவன் அதுவரையில் கற்றிருந்த கல்வியனைத்தும் அவனுக்குத்தினையளவாகத் தோன்றுமாதலால் அதனாலாகிய இன்பத்தை அவன் முற்றும் இழந்தவனாவான். ஆகையால் ஒருவன் கல்வியிற்சிறந்து அதனாலே நாகரீகமடைந்து சௌக்கியவானாவானென்று சொல்லுவதற்கிடமில்லை. மேலும், கல்வி ஒருவனுடைய அறிவை விசாலப்படுத்துகிறபடியினால் விதிவிலக்குகளையறியத்தக்க பகுத்தறிவு அவனுக்கு உண்டாய்விடுகிறது. அவ்விதிவிலக்குகளுக்கு இணங்க ஏதோ சில அசந்தர்ப்பங்களினாலே அவனுக்குச்சாத்தியமாகாதபோது அவனுடைய மனச்சாட்சி அவனுக்குச்செய்யும் வாதனை இவ்வளவவ்வளவல்ல. கல்வியினாலே பகுத்தறிவுண்டாகி விதிவிலக்குகளையுணர்ந்த ஒவ்வொருகல்விமானும் இவ்விஷயத்தை அநுபவவாயிலாகக்காணலாம். கல்வியினாலும் அறிவுவிளக்கத்தினாலுமுண்டாகும் மனச்சந்துஷ்ட்டி மிகப்பெரிதென்று ஒவ்வொருவனும் வாசாகயிங்கரியமாகப்பேசிக்கொண்டுதிரியலாம். ஆனால் கல்விகற்றுப் பகுத்தறிவுவிளங்கப்பெற்ற ஒவ்வொருவனும், தான் பகுத்தறிவினால் நூல்கள் வாயிலாகக்கண்டறிந்த விதிவிலக்குகளுக்குட்பட்டு நடக்கமுயலும்போது, தினந்தோறும் எத்தனையோமுறை அவனுடையமனச்சாட்சி உள்ளிருந்து அவனை "சீ, சீ, இது தகாதகாரியம்." என்று வற்புறுத்திக்கொண்டிருக்கவும் தன்னுடைய தேக உபாதைகள் முதலிய காரணங்களினாலே அதைமீறி நடக்கத்தலைப்படும்போது அவனுக்குண்டாகும் மனக்கிலேசத்தைவிட ரவுரவநிரயத் துன்பமும் பெரிதாயிருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. இக்கருத்தையமைத்தே,

> "நன்றறிவாரிற்கயவர்திருவுடையர்
> நெஞ்சத்தவலமிலர்."

என்று தெய்வப்புலவர் தமது திருக்குறளில் உறுதிமொழிகூறியிருக்கின்றனர். இன்னது நன்று இன்னதுதீது என்றறியத்தக்க பகுத்தறிவுபெற்ற விவேகிகளைவிட அத்தகைய பகுத்தறிவு பெறாதகயவர் சுகமுடையவராவார்; ஏனெனில், செய்யவேண்டிய இன்னதைச்செய்யாமற்போனோமேயென்றும், செய்யக்கூடாத இன்னதைச்செய்தோமேயென்றும் கவலைகொள்ள அவர்களுக்கிடமில்லையென்பதே மேற்படி குறளின்கருத்து. இச்சுருதியையும் நம்முடைய அநுபவத்தையும்விட வேறே என்னபிரமாணம்வேண்டும்? கல்வியினால் நாகரீகமடைபவர்களின் சுகம் இப்படியிருக்க, இனி செல்வத்தினால் நாகரீக

மடைபவர்களின் சுகத்தையும் சிறிது ஆராய்ந்துபார்ப்போம். இடம் பொருள் ஏவல்முதலிய சகலசௌக்கியங்களுக்கும் செல்வமே முக்கியகாரணமாயிருக்கினும் ஒருவனைக் கவலையென்னும் சாகரத்தில் வீழ்த்தத்தக்கது செல்வத்தைவிட. வேறொன்றுமில்லையென்பது சுருதி யுக்தி அநுபவத்திற்கொத்தவிஷயம்.

"இன்னறரும்பொருளையீட்டுதலுந்துன்பமே
பின்னதனைப்பேணுதலுந்துன்பமே - யன்ன
தழித்தலுந்துன்பமேய்க்தோபிறர்பா
விழைத்தலுந்துன்பமேயாம்."

என்பதுபோன்ற மேலோர் அநுபவவாக்கியங்களினாலே ஆதியோடந்தமாகப் பொருள் ஒருவனுக்குத் துன்பத்தைத்தருவதென்றேற்படுகிறபடியினால் பலவகைக் கிலேசங்களுக்கும் பொருளைக் காட்டினும் துக்கத்துக்கிடமானது வேறென்னுளது? இக்கருத்தையமைத்தே, ஒரு ஞானநூலும்

"கெடுவதாம்பொருட்செல்வமேபல்வகைக்கிலேசமற்றதுதன்னை
விடுவதேசுகமெனவுமோர்ந்திலைமுனம்விடுத்துளோர்க்குனைப்போலு
நெடியயூகமதில்லையோசொல்லுதிநெஞ்சமே."

என்றுகூறுகின்றது. நமக்கும் இவ்விஷயம் அநுபவமன்றி வேறல்ல. ஆகையால் செல்வமிகுதியினாலேயொருவன் நாகரீகமடைந்துசௌக்கியம் பெறுவது முக்காலத்துமில்லையென்றே ஏற்படுகின்றது. இதனால் கல்வியும்செல்வமு மில்லாமல் நாகரீகமற்று வனமுதலிய இடங்களில் சஞ்சரித்துக்கொண்டு திரிகிற ஜாதியாரே எதார்த்தத்தில் மனச்சந்துஷ்ட்டி யடைந்தவர்களென்று தெரியவருகின்றது. இக்கோட்பாட்டுக்கு ஆதாரமாக இன்னும் சிலநியாயங்கள் எனக்குத்தோன்றுகின்றன. நாகரீகத்தில் அபிவிர்த்தியடையஅடைய மேலும் மேலும் சௌக்கியத்தையே அவாவுகிறபடியால் மனிதர்கள் எவ்வளவு பொருளிருந்தபோதினும் தமக்குச் சௌக்கியம் பூர்த்தியாயிற்றென்றும், இனி தாம் அவாவவேண்டுவது ஒன்றுமில்லையென்றும் எண்ணவேமாட்டார்கள். நாகரீகத்திற்குறைந்த ஜனங்களோ அப்படியல்ல. தம்முடையசௌக்கியத்தை விர்த்திசெய்யத்தக்கபொருள்கள் இன்னின்னவை யென்றுணரத்தக்க கல்விதமக்கிராமையினாலும், அப்படிப்பட்டனவற்றை யடைவதற்குப் பொருள்பெற்றிராமையினாலும், மேலும் மேலும் அவாவுதற்கு இடமில்லாமல், தமக்குக்கிடைத்ததையே பெரும்பொருளாகமதித்து மனக்கிளர்ச்சியெய்திச் சௌக்கியமடைகிறார்கள். நாகரீகம் அவ்வளவாக அபிவிர்த்தியடையாத இருநூறு முந்நூறு வருஷங்களுக்குமுன்னேயிருந்த தனவான்கள் தம்முடைய சௌக்கியத்தை விர்த்திசெய்துகொள்வதற்கேற்ற சாதனங்கள் கிடைக்கப்பெற்றிராமையினாலும், அவைகளைத் தாங்கள் உணர்ந்திராமையினாலும், தமக்குச்சுலபமாய்க்கிடைக்கக்கூடிய பொருள்களைக்கொண்டு மிகவும் சௌக்கியமாய் உயிர்

வாழ்ந்திருந்து, சத்திரம் சாவடிகட்டுதல், குளமேற்படுத்துதல், தேவாலயம் நந்தவனம் அமைத்தல் ஆகிய பரோபகாரார்த்தமான காரியங்களைச் செய்யக்கூடியவர்களா யிருந்தார்கள். நாகரீகம் அபிவிர்த்தியடைந்திருக்கும் இக்காலத்திலோ தனவான்கள் மேலும் மேலும் தங்களுடைய சௌக்கியத்தை விர்த்திசெய்துகொள்ள எண்ணி அதற்கேற்ற அளவிறந்த சாதகங்களைச் சேகரிப்பதில் தம்முடைய பொருளனைத்தையும் செலவுசெய்துவருகிறார்கள். அதனால் பரோபகாரார்த்தமான காரியங்களில் விநியோகிக்க அவர்களுக்குப்பொருள் மிகுதியாய் நிற்பதில்லை. அப்படியிருந்தும் இவர்கள் இப்போதடையும் சுகம் அப்போது அவர்களடைந்த சுகத்திற்கு எவ்வளவும் நிகராகாது. அன்றியும் நாகரீகம் அபிவிர்த்தியடைந்திருக்கும் இடங்களிலுள்ள ஜனங்களுக்குப்பெரும்பாலும் அனேகவிதயான துர் எண்ணங்கள் உண்டாவதையும், அதனாலே அவர்களிடத்தில் பலவகையான கூடா ஒழுக்கங்களிருப்பதையும், நாகரீகங்குறைந்துள்ள இடங்களில் வசிப்போர்க்கு அப்படிப்பட்ட துர் எண்ணங்கள் பெரும்பாலும் விளையாமலிருப்பதையும், அவர்கள் கூடியவரையில் சுசீலர்களாயிருப்பதையும் நாம் உலகசரித்திரத்தினால் அறிகிறோம். அல்லாமலும், நாகரீகத்திற்சிறந்த நகரவாசிகளைக் காட்டினும் நாகரீகத்திற்குறைந்த வனவாசிகள் தேகதிடம்பெற்றவர்களாயும் பெரும்பாலும் வியாதிகள் அணுகாதவர்களாயுமிருந்து சுவேச்சையாய் நெடுங்காலம் ஜீவித்துவருகிறார்கள். அன்றியும், நாகரீகத்திற்சிறந்த நகரங்களில் நெடுங்காலம் ஜீவித்திருந்தும் எதார்த்தத்திலே சௌக்கியத்தையடையாத காரணத்தினாலல்லவா சிலர் அவ்வாழ்க்கையை அருவருப்புடன் துறந்து நெடுந்தூரம்சென்று வனமுதலிய இடங்களில் கேவலம் மிலேச்சர்களைப்போலத் திரிந்துகொண்டிருக்கிறார்கள்? அவர்கள் துறவிகள். நாகரீகத்திற்சிறந்த நகரத்தில் தாங்களடைந்த சுகத்தைவிட அதிகசுகத்தைப் பெறலாமென்று கருதியல்லவோ அதைத்துறந்து அப்படிப்பட்ட இடங்களுக்குப்போகிறார்கள்?. அத்துறவிகளைப்போலவே அவ்விடத்திற் சதாவசித்துக்கொண்டேயிருப்போர் நாகரீகத்திற் குறைந்தவர்களாயினும் அவர்களடையும் சுகம் எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்! மேற்கூறிய நியாயங்களையெல்லாம் சித்தசமாதானத்தோடு யோசித்துப்பார்க்கையில் நாகரீகத்திற் சிறந்தவர்களைப் பார்க்கினும் நாகரீகத்திற் குறைந்தவர்களே எல்லாவிதத்திலும் சௌக்கியமுடையவர்களென்பது சுருதி யுக்தி அநுபவத்திற்கு ஒத்திருக்கின்றது.

இவ்வாறு சதானந்தர் தம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தவுடனே சவுந்தரர் என்பவர் அடியில் வருமாறு பேசலுற்றார்:—

வேந்தர் வேந்தே! இதுகாறும் சதானந்தர் பேசிக்கொண்டுவந்த விஷயங்கள் எனக்கு வியப்பைத்தருகின்றன. கல்வி செல்வம்

இவற்றால் நாகரீகமடைந்தவர்களைவிடக் கேவலம் மிலேச்சர்களாக வனமுதலிய இடங்களிலே திரிந்துகொண்டிருப்பவர்கள் அதிக சௌக்கியத்தையும் மனக்கிளர்ச்சியையும் அடைகிறார்களென்று அவர் கூறியதும் அதற்கு அவரெடுத்துக்காட்டிய சில நியாயங்களும் எனக்கு எவ்வளவும் உடன்பாடில்லை. அவர் எடுத்துக்காட்டிய நியாயங்கள் சுருதி யுக்தி அநுபவங்களுக்கு ஒத்திருக்கின்றனவென்று அவர் புகன்றதும் மஹாவிந்தையாயிருக்கின்றது. கல்வியினாலே பகுத்தறிவு விளக்கம் பெறுகிறதென்றும், அப்பகுத்தறிவினாலே நாம் நன்மைதீமைகளை நன்றாயறியக் கூடியவர்களாயிருக்கிறோமென்றும், விதிவிலக்குகளுக்குட்பட்டு நடக்க நமக்கியலாதபோது அளவுகடந்த மனோதுக்கம் நமக்குண்டாகிறதென்றும், இவ்விஷயத்தையோசிக்கையில் பகுத்தறிவில்லாத கயவர்களே சௌக்கியவான்களென்றும் நியாயங்கூறி "நன்றறிவாரிற்கயவர் திருவுடையர் நெஞ்சத்தவலமிலர்." என்னும் சுருதியைத்தமக்கு ஆதாரமாகக்காட்டினார். அத்திருக்குறளின்கருத்தை அவர் எவ்வளவும் அறிந்திலரென்றே யான் சொல்லத்துணிவேன். ஏனெனில், கயவர் புண்ணியபாவங்களை யுணராமையினால் ஒருகவலையும் இல்லாதிருப்பதனாலே தெய்வப்புலவர் அவர்களைத்திருவுடையரெனக் குறிப்பாலிகழ்ந்தபடியேயன்றி அவர்களை எவ்வளவும் புகழவந்தாரன்று. திருக்குறளில் கயமை என்னும் தலைப்பெயருடைய 108-ம் அதிகாரத்திலுள்ள மேற்படி செய்யுளின்கருத்து கயவருக்கு வஞ்சப்புகழ்ச்சியே யென்பதற்கு அதே அதிகாரத்திலுள்ள இன்னும் இரண்டொருசெய்யுட்களை யெடுத்துக்காட்டுகிறேன்.

"தேவரனையர்கயவரவருந்தா
மேவனசெய்தொழுகலான்."

தேவரும்கயவர்களும் ஒரேதன்மையுள்ளவர்கள்; எப்படியெனில், தேவர்களும் ஒருவருக்குட்படாமல் தமக்கு விருப்பமானவைகளையெல்லாம் செய்தொழுகுவார்கள்; அவ்வாறே கயவரும் தம்மை வினவுவாரொருவருமின்றித் தம் மனம் போனபடியெல்லாம் நடப்பார்கள் என்பது அக்குறளின்கருத்து. கயவரை இங்குதேவர்களுக்கு ஒப்பாகச் சொன்னதுபற்றியே அவர்களை உயர்வாகக் கூறியதாக நாம் கொள்வது நியாயமாகுமா ? தெய்வப்புலவர் அவர்களைப் புகழ்வார்போன்று நிரம்பவும் பழிக்கவந்தனரன்றோ ? இவ்வாறே அடியிற்கண்ட குறளினும் வஞ்சப்புகழ்ச்சியைப் பரக்கக்காணலாம்.

"மக்களேபோல்வர்கயவரவரன்ன
வொப்பாரியாங்கண்டதில்."

மேலுக்கு வடிவாலேமாத்திரம் மனிதர்களைப்போலவே கயவரிருப்பார்கள்; ஆனால் மனிதர்களுக்கிருக்கவேண்டிய குணங்களிலெதுவும் வாஸ்தவத்தில் அவர்களிடத்திலிராது; ஆகையால் இரண்டுபொருள்கள் ஒன்றையொன்று மேலுக்குமாத்திரம் எல்லாவிஷயங்களிலும் ஒத்தி

ருப்பதுபோற்காட்டி வாஸ்தவத்தில் குணங்களிலே ஒவ்வாமலிருக்குக்கக்கது வேறொன்றும்இவ்வுலகத்திலில்லையென்பது இதன்கருத்து. இச்செய்யுளிலும் புகழ்வதுபோல் கயவர்களை இகழ்ந்ததாயிற்று. இந்தநியாயங்களை யோசிக்கையில் சதானந்தர் கூறியவிஷயம் முற்றும் நியாயவிருத்தம். கல்வியானது கற்றவணையிலொருவனுக்குடனேபொருள்முதலிய இன்பத்திற்குரிய சாதகங்களைத் தராவிடினும் தானே ஒருவித இன்பத்தைப்பயந்து கொண்டிருக்கிறதென்பதை நாம் அநுபவத்திற் காண்கிறோம். நவரசங்களு மமைந்த ஒரு அருமையான நூலை நாம் வாசித்து அதன் சுவையை உணர்ந்துகொண்டே போகும்போது புறத்தே தேக உபாதைகள் எவ்வளவிருந்தபோதினும் அவற்றையெல்லாம் நாம் மறந்து ஆனந்த பரவசராகி யிருக்கிறோமல்லவா ? ஆகையால் கல்வியினாலே நாகரீகம்பெற்றஒருவன் எவ்வகையானதுன்பங்களையும் ஒருபொருளென மதியாமல் நினைத்தபோதெல்லாம் இணையிலா ஆனந்தத்தை யடைகிறான். செல்வப் பொருளினாலே ஒருவனுக்கு அனேக கவலைகளிருக்கிறபடியினால் அதனால் நாகரீகமடைந்த ஒருவனும் சௌக்கியவானல்லவென்று சதானந்தர் விளம்பினர். அவர் சொல்லும் விஷயத்தை யானும் ஒப்புக்கொள்ளுகிறேன். எந்தவஸ்துவினாலே நமக்கு அதிகசுகமுண்டாகிறதோ அந்தவஸ்துவினாலே அதிகதுக்கமுண்டாவது உலக இயற்கை. ஒருபொருளினாலே நமக்குத் துக்கமுண்டாகாவிடில் அதனாலுண்டாகும் சுகத்தை நாம் உணரவே மாட்டோமென்பது மனோதத்துவலட்சண சாஸ்திர சித்தாந்தம். நிழலருமை வெய்யலினாலல்லவோதெரியவரும்? முள்ளில்லாத தாழைமடலுண்டோ ? தாழையினாலாகிய நறுமணத்தை நாம் பெறவேண்டுமாயின் முள்ளுக்கு அஞ்சுவதனாற்பயனென் ? அதுபோல் கல்வியினாலும் செல்வத்தினாலும் நாகரீகமடைந்திருப்பவர்கட்குக் கவலைகள் மிகுந்திருக்கினும் அவற்றைப்போக்கத்தக்க சுகங்களும் அவற்றைவிரா மற்போகவில்லை. கல்வி செல்வமற்றவர்களாகவும் நாகரீகமில்லாதவர்களாகவுமுள்ள வனவாசிகளுக்கு நாகரீகத்தால் விளையும் சுகமுமில்லை துக்கமுமில்லை. நாகரீகத்திற்சிறந்தவர்களிடத்து அனேகவிதமான கெட்ட எண்ணங்களும் கூடாவொழுக்கங்களும் அதனால் அசௌக்கியமும் இருப்பதாகச் சதானந்தர் அபிப்பிராயப்படுகிறார். பகுத்தறிவு விளக்கமுற்று விவேகம் அபிவிர்த்தியாகும்போது துர்க்குணங்கள் மனதில் புகுவதற்கிடமேயிராது. வருடந்தோறும் இராஜாங்கத்தாரால் குற்றவாளிகளென்று தீர்மானித்துத் தண்டிக்கப்படுவோர்களிற் பெரும்பாலார் கல்வியில்லாத அநாகரீகர்களாகவே யிருக்கின்றார்களேயன்றிக் கல்வியிற்சிறந்து நாகரீகம்பெற்றவர்களாக இருப்பதில்லை. தர்மசிந்தை, இரக்கம், புகழ்ச்சிவிருப்பு, தேசாபிமானம், தெய்வபக்தி, பரோபகாரமுதலிய நற்குணங்கள்யாவும் நாகரீகமுடையாரிடத்தே நாம் பெரும்பாலும் காணலாம். அநாகரீகரிடத்தில் சுயப்பிரயோசனம், மூடபக்தி, இரக்கமின்மை முதலிய மிருககுணங்க

ளே விசேஷமாகக்காணப்படும். அநாகரீகருக்குத் தேகதிடம், தீர்க்காயுள் முதலிய அநுகூலங்களிருப்பதாகச் சதானந்தர்நினைக்கிறார். அவர்களுடைய தேகதிடம் முதலிய யாவும் நாகரீகருக்குள்ள அறிவுக்குமுன்னே சூறையிற்பட்ட இலவுபோற் பறக்கவேண்டும். நாகரிகர் பலவகையான சாஸ்திர ஆராய்ச்சியினாலே பிணிகள் தம்மையணுகாவகைக்கும் ஆயுள் நீடித்திருக்கும்வகைக்கும் அளவிறந்த சூட்சிகளைத் தினம் செய்துகொண்டுவருவதை மறுக்கவல்லார் யாவர்? அதுநிற்க. நாகரீகத்தன்மையே மானிட இயல்பென்பதற்கும் அநாகரீகத்தன்மை மானிடருக்கு எவ்வளவும் ஏற்றதன்றென்பதற்கும் ஒருயுக்தி சொல்லுகிறேன், சற்றே செவிசாய்க்கவேண்டும். நெடுங்காலமாக நாகரீகமில்லாமல் மிருகங்களைப்போல் மிலேச்சர்களாய்ச் சில ஜாதியார் திரிந்துகொண்டிருந்த இடங்களிலே நாகரீகம்பெற்ற வேறு சில ஜாதியார்போய்க் குடியேறத்தொடங்கிய மாத்திரத்தில் அந்த மிலேச்சஜாதியார் நாகரீக ஜாதியாருடைய நடை உடை பாவனைகளையும் அப்பியாசங்களையும் அநுசரித்து நாளாவர்த்தியிற் சுகமடைந்ததாகச் சரித்திரங்களால் தெரியவருகிறதேயன்றி, நூதனமாய்ச்சென்ற நாகரீகஜாதியார் தம்முடைய அப்பியாசங்களையெல்லாம் விட்டு அம்மிலேச்சர்களைப்போல் திரிந்து சுகஹீனர்களானதாகத் தெரியவரவில்லை. நாகரீகம்பெற்ற ஐரோப்பியர் - அமெரிக்கா முதலிய நாகரீகமற்ற இடங்களில் ஆதியிலேபோனபோது நேர்ந்தவிர்த்தாந்தங்களை அக்காலத்திய சரித்திரம் வெள்ளிடைமலைபோல் விளக்கவல்லது. வெவ்வேறு தன்மையான இருவகையாகிய ஜாதியார் மேற்கண்டவாறு ஒருவரோடொருவர் கூட்டுறவுகொள்ளும்போது அநாகரீகர் நாகரீகராகின்றார்களேயன்றி நாகரீகர் அநாகரீகராவதில்லை யாகையால் மானிட இயல்புக்கு ஏற்றது நாகரீகமென்றே இனிது விளங்குகிறது. சுகத்தை நாடுவதும் மானிட இயல்பு என்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. ஆகையால், பள்ளியிற்பயிலும் சிறுமகவும் நாகரீகமே சுகத்தைத்தரத்தக்கதென்றும் அநாகரீகமே அசுகத்தைத் தரத்தக்கதென்றும் சொல்லவல்லது. அதுநிற்க. நாகரீகம்பெற்ற நகரத்தில் நெடுங்காலம்வசித்துச் சுகமடையாமையால் சிலர் அவ்வாழ்க்கையை வெறுத்துத் துறவிகளாகி வனத்தில் அநாகரீகர்களைப்போலச் சஞ்சரித்துச் சுகமடைகிறார்களென்று சதானந்தர்கூறி முடித்தார். துறவிகளாகப்போகிறவர்களை நாம் அநாகரீகரென்று சொல்லுவது எவ்வளவும் தர்மமாகாது. ஏனெனில், அவர்கள் மேலுக்குமாத்திரம் அநாகரீகர்களைப்போலிருந்தபோதினும் உள்ளே ஈஸ்வரத்தியானம் முதலியவற்றால் பிரமானந்தத்தில் மூழ்கியிருப்பவர்கள். அவர்களை நாகரீகரினும் நாகரீகர்களாகவே கொள்ளவேண்டும். அவர்கள் எவ்விடத்திலே எந்தப்படியிருந்தாலும் சுகிகளே. இத்தியாதிகாரணங்களினாலே அநாகரீகரைவிட நாகரீகரோ விசேஷ சுகமுடையாரென்பது என்னுடையகோட்பாடு.

இவ்வாறு சவுந்தரர்பேசி முடித்தபிறகு, பத்மநாபன் தன்னருகிலிருந்த மந்திரியாகிய கருணாகரரைநோக்கி, இவ்விருவருக்குள்ளே யாருடைய அபிப்பிராயம் உமக்கு நியாயமாகத் தோற்றுகிறதென் றுவினவ, அவர் சிறிதுநேரம்யோசித்து சவுந்தரர்கூறியதே சுருதி யுக்தி அநுபவத்திற்கு ஒத்திருக்கின்றதென்று விடைபகர்ந்தனர். அதன்பின் பத்மநாபன் தன்னுடைய அபிப்பிராயமும் அவ்வாறேயென்று தெரிவித்துத் தன்சந்தேகம் தெளியப்பெற்று அவரவர்களைத்தத்தம் இருப்பிடத்திற்குச்செல்ல விடைகொடுத்தனுப்பினன்.

## விவிதவிஷய விளக்க வினாவிடை.

(தொடர்ச்சி.)

91. சிடன்.—ஐயா! தூக்கத்தைப்பற்றியும் கனவைப்பற்றியும் தாங்கள் கூறிவந்தவிஷயங்களைச் சித்தசமாதானத்துடன்யோசித்துப்பார்த்தேன். கனவைக்குறித்து இன்னும் சில விஷயங்களைக் கேட்டுவைக்க யான் விரும்புகிறேன். நாம் தூங்கும்போது மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் பஞ்சேந்திரியங்களுக்கும் நாம் காணும் கனவுகளுக்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா?

ஆசிரியர். ஆம். மிகவும் சம்பந்தமுண்டு. ஆனால், எல்லாப்பொறிகளினாலும் கனவுகள் ஒவ்வொரு விஷயத்திலே பாதிக்கப்படினும் சில பொறிகளினாலே மிகுதியாகவும் சில பொறிகளினாலே குறைவாகவும் கனவுகள் பாதிக்கப்பட்டு வருவதை நாம் அநுபவமாகக்காணலாம். இதற்குச் சில உதாரணங்களை விரிவாக எடுத்துக் காட்டுகிறேன்:—

ஒருவன் இருட்டான அறையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கையில் திடீரென்று அதிக பிரகாசமுள்ள ஒருவிளக்கையேற்றி அவனுடைய கண்ணிமையின் உகிர நரம்புகளின்மேல் வெளிச்சம் படும்படி சிறிதுநேரம் வைப்போமாகில் நெருப்பின் சம்பந்தமான ஒருவித கனவை அவன் காண்பது நிச்சயம். ஏதோ ஒருவீடுபற்றி எரிந்ததாகவாயினும், வேறே ஏதோ ஒருவகையானதீயாபத்துநேரிட்டதாகவாயினும் அவன் கனவு காண்பான். இந்தப்படியே வியாதி முதலிய காரணங்களினாலே நம்முடைய நா கைத்துக் கொண்டிருக்குமானால் கைப்பான பதார்த்தங்களை நாமுண்டு அருவருப்பதுபோற் கனவுகாண்பது இயற்கை. நாம் தூங்கும்போது படுக்கையறையில் பரிமளம் வீசத்தக்க வஸ்துக்களை இங்குமங்கும் வைத்துவிட்டு உறங்குவது உத்தமம். ஏனெனில், கெட்டநாற்றத்தினாலே பாதிக்கப்படும் நாசி நரம்புகளினால் துர்க்கனவுகள் காணாமல் சுகமாய் நாம் தூங்குவதற் கிடமிருக்கும். நாம் தூங்கும்போது இனிய ஓசை, வீணாகானங்கள் முதலியவை சமீ

பத்தில் எங்கேயாவது யாராகிலும் செய்துகொண்டிருப்பார்களாகில் நாம் நல்ல கனவுகள் காண்பதும், திடீரென்று ஏதேனும் அருவருக்கத்தக்க சப்தங்கள் தோன்றுமாயின் அவைகளுக்குச் சம்பந்தப்பட்டவதேனும் கெட்ட கனவுகள் நாம் காண்பது மியற்கை. இப்படியே நாம் படுத்துக்கொள்ளும் மெத்தை முதலியவை மேடும் பள்ளமுமாக இருக்குமானால் நாம் மேலிருந்து கீழே பொத்தென்று விழுவதுபோன்ற பலவகையான துன்பத்தைத் தரத்தக்க கனவுகள் காண்கிறோம். இவ்விஷயங்களையெல்லாம் யோசித்துப் பார்க்கையில் நாம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது நம்முடைய பஞ்சேந்திரியங்களுக்கு நேரிடும் சுகதுக்கங்களுக்கு ஏற்றபடி பலவகையான கனவுகளை நாம் காண்கிறோமென்று தெரியவருகிறது. சில வருஷங்களுக்கு முன்னே (Edinburgh) எடின்பர்க் என்னும் நகரவாசிகள் ப்ரெஞ்ச் தேசத்தார் தம்மேல் படையெடுத்துவரப்போகிறார்களென்றச்சங்கொண்டபடியால் அந்நகரத்தின் அதிபதிகள் சத்துருக்கள்நெடுந்தூரத்தில்வரும் அரவங்கண்டமாத்திரத்தில் ஒரு பீரங்கியைச்சுட்டு அந்நகரவாசிகளுக்கும் இராணுவவீரர் முதலிய யாவருக்கும் எச்சரிக்கை பண்ணுவோமென்று தெரிவித்திருந்தார்கள். இப்படியிருக்கையில் அந்நகர இராணுவத்தைச் சேர்ந்த ஒரு போர்ச்சேவகன் தன்மனைவியோடு வீட்டில் படுத்து அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தபோது ஒருநாள் இராத்திரி பனிரண்டுமணிக்குப் பீரங்கிசப்தத்தைத் தான் கேட்டதுபோலவும், உடனே அங்கிருந்து தான் ஆயுதபாணியாக யுத்தசன்னித்தனாய்க்கோட்டைக்குச் சென்றதுபோலவும், சத்துருக்களோடு நெடுநேரம் சண்டைசெய்ததுபோலவும், அவ்வூராரெல்லாம் நாற்புறமும் கலவரப்பட்டு ஓடிக்கொண்டிருந்ததுபோலவும், அநேகர் யுத்தத்தி லிறந்ததுபோலவும் கனவுகண்டு தேகம்வியர்த்து மார்பு படபடவென்றுதுடிக்க விழித்தெழுந்தான். சற்றேறக்குறைய அதேசமயத்தில் அவனுடைய மனைவியும் அதேமாதிரி சண்டை ஆரம்பித்ததுபோலவும், தன்னுடைய கணவனுக்கு அதிஆப்தனாகிய ஒருவன் சண்டையி லிறந்துபோனதுபோலவும் கனவுகண்டு துயரத்தோடு விழித்துக்கொண்டனள். பிறகு நெடுநேரம்வரையில்ஏககாலத்திலே நாமிருவருஞ்சற்றேறக்குறைய ஒரேமாதிரியான கனவு கண்டதற்குக் காரணம் யாதென்று ஒருவரோடொருவர் ஆலோசித்துக்கொண்டிருந்து பொழுதுவிடிந்துபார்த்தபோது, அடுத்த அறையில் ஒருபலகையின்மேல் வைத்திருந்த இருப்புக்குறடொன்று எப்படியோ கீழேவிழ்ந்திருந்தது. அதுவிழ்ந்தபோதுண்டானசப்தமே தங்களிருவருக்கும் பீரங்கிவெடித்ததுபோற் கேட்டிருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டார்கள். பீரங்கியின் தோற்றம் உண்டானமாத்திரத்தில் அதற்குச் சம்பந்தமான சகல விஷயங்களும் தொடர்ச்சியாக மனதிற்குப் புலப்படலாயிற்று. இந்தியாதி நியாயங்களினாலே நம்முடைய இந்திரியங்களுக்கும் கனவுக்கும் அதிக சம்பந்தமிருக்கிறதென்று பிரத்திட்சமாய்த் தெரியவருகிறது.

92. சி.—ஐம்பொறிகளுக்குள்ளே ஏதேனும் ஒன்றுக்கு நாம் தூங்கும்போது நேரிடும் சுகதுக்கங்களுக்கேற்க, அவ்வாறு நேரிட்ட க்ஷணந்தொடங்கித் தொடர்ச்சியாய்ச் சில விஷயங்களைக் கனவு காண்பது இயற்கைதான். சில சமயங்களில் நெடுநேரம் வரையிலே ஏதோ ஒருவிஷயத்தைப்பற்றிக் கனவு கண்டுகொண்டே நாம் வரும்போது ஏதோ ஒருவகையான ஆபத்து நேரிடுவதுபோல் நமக்குத் தோன்றுவதற்கும் புறத்தே நம்முடைய பொறிகளுக்கு லட்சியப்படும் விஷயங்களுக்கும் பொருந்தும்படி நாம் கனவுகாண்பதற்குக் காரணம் யாது?

ஆ.—நீ சொல்லும் விஷயம் எனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. அதை உதாரண ரூபமாக விரித்துச் சொல்லுக.

93. சி.—ஒருநாள் நானே கண்ட கனவைச் சொல்லுகிறேன். என்னுடைய வீட்டைவிட்டுப் புறப்பட்டு நெடுநாளாகக் காசி இராமேசுரம் முதலிய திவ்ய தேசங்களுக்கெல்லாம் யாத்திரைசெய்துகொண்டிருந்ததுபோலவும், அப்போது ஒருநாள் நிர்மானுஷ்யமான ஒருகாட்டிலே தனியே பசி தாகம் முதலியவற்றால் இளைப்படைந்து நடைதளர்ந்து ஓரிடத்தில் உட்கார்ந்ததுபோலவும், அப்போது என்னை ஒரு யானை துரத்திக்கொண்டுவந்ததுபோலவும், அதைக்கண்டமாத்திரத்தில் திபுதிபுவென்று ஓடினதுபோலவும், இடையில் தவறி ஒரு பள்ளத்தாக்கில் வீழ்ந்ததுபோலவுங் கண்டு பயந்து விழித்துக்கொண்டேன். அப்போது நான் சயனித்துக்கொண்டிருந்த கட்டிலின்மேல் இரண்டு மெத்தைகள் போடப்பட்டிருந்தமையாலும், அவ்விரண்டு மெத்தைகளுக்கு மிடையில் அரையங்குல அளவுக்கு நெடுகப் பள்ளமிருந்தபடியாலும், நான் ஒருமெத்தையின் முனையிலிருந்து மற்றொரு மெத்தையின் மேற்புரளும்போது தூக்கத்தில் அப்பள்ளத்திலே என் முதுகு வந்து தங்கியதாகத் தெரியவந்தது. என் முதுகு ஒருமெத்தையின் முனையிலிருந்து அச்சிறு பள்ளத்திற் புரண்டதுதான் நான் ஒருபெரும் பள்ளத்தாக்கிலே விழுந்ததாகக்கனவுகண்டதற்குக் காரணமென்று அறிந்துகொண்டேன். இரண்டு மெத்தைகளுக்கு மிடையிலிருந்த சிறு பள்ளத்தில் நான் புரண்டதுமுதல் அதுசம்பந்தமான ஏதேனும் கனவைத் தொடர்ச்சியாய்க் காண்பது இயற்கை. அப்படிக்கல்லாமல் அதற்குச் சம்பந்தமான சில விஷயங்களை நான் அதற்குமுன்னமே கனவுகண்டது என்ன விசித்திரம்?

ஆ.—இப்போது உன் கருத்து எனக்கு நன்றாகப் புலப்படுகிறது. இரண்டு மெத்தைகளுக்குமிடையிலிருந்த பள்ளத்தில் உன் தேகம் புரண்டுவர ஆரம்பித்தபோதே நீ வீட்டைவிட்டு யாத்திரைசெய்வதற்காகப் புறப்பட்டதுபோலவும், மெத்தைப் பள்ளத்தில் உன் தேகம்வந்து தங்கியபோது நீ காட்டிலே பள்ளத்தில் வீழ்ந்ததுபோலவும் கண்டிருக்கவேண்டும். நீ நெடுங்காலமாகக்கனவு கண்டதுபோல் நினைக்கும் அவ்வளவும் அந்த க்ஷணநேரத்திலே உன் மனதில தோன்றியிருக்கவேண்டும்.

"காணாது கேட்டதெல்லாங்
கண்டதாக்காட்டியேயணுவாய்ச்சுருக்கிடுங்கபடநாடகஜாலமோ
எல்லாமும்வலதிந்தமனமாயையேழையாமென்னாலடக்கவசமோ."

என்று பெரியோர் மனதின் விசித்திரத்தைப்பற்றி வியந்துகூறியிருப்பதை நீ யறிந்திலையோ? நெடுநேரம் வரையில் நீ கனவுகண்டு கொண்டிருப்பதாக நினைக்கும் அவ்வளவும் வாஸ்தவத்தில் ஒருநொடியில் நீ கண்டவிஷயந்தான். நீ மேலே கண்டதாகச் சொல்லிய கனவுக்கும் மெத்தைப் பள்ளத்துக்குமுண்டான சம்பந்தத்தைப்பற்றிவேறொரு வகையினாலும் நியாயங் கூறக்கூடும். நீ யாத்திரைசெய்துகொண்டு வந்ததுபோல் கண்ட விஷயங்களுக்கும், உன் மெத்தைப் பள்ளத்துக்கும் யாதொரு சம்பந்தமும் முதலிலிராமலே யிருக்கலாம். ஆனால் நீகாட்டில் போய்க்கொண்டிருப்பதுபோல் கனவுகண்டுகொண்டிருந்த சந்தர்ப்பத்திலே இங்குமெத்தைப்பள்ளத்தில் சாயவேண்டியதாய்நேரிட்டபடியால்உடனே அங்கு நீஒருபள்ளத்தில் வீழ்ந்ததுபோற்கனவுகண்டனை. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மெத்தைப் பள்ளமில்லாமல் வியர்வையினால் நீ படுத்திருந்தமெத்தையின் ஒருபுறம் ஜில்லென்றிருந்ததென்று வைத்துக்கொள்வோம். அப்போது காட்டில் ஏதோ ஆறு பெருகிவந்ததுபோலவாவது ஜலசம்பந்தமான வேறேயாதொருவிஷயம் நேரிட்டதாகவாவது நீ கனவு கண்டிருப்பாய். ஆகையால், இத்தியாதி அநுபவப் பிரமாணங்களையெல்லாம் யோசித்துப்பார்க்கையில், நாம் தூங்கும்போது நம்முடையபொறிகளுக்கு லட்சியமாகும் விஷயங்களுக்கேற்றபடி நாம் கனவுகாண்பது சுபாவமென்று ஏற்படுகின்றது.

94. சி.—இனி நடக்கப்போகும் விஷயங்களைப்பற்றிச் சில சமயங்களில் நாம் கனவு காண்கின்றோமே. அதற்குக் காரணம் யாது?

ஆ.—நீ இதுவரையில் கேட்டுக்கொண்டுவந்த வினாக்கள் யாவற்றினும் இவ்வினா மிகவும் கஷ்டமானது. இவ்விஷயத்தைப்பற்றிப் பலர் பலவாறாக அபிப்பிராயப்படுகிறார்கள். நடக்கப்போகும் விஷயங்களைப்பற்றி முன்னே அறிந்துகொள்ளுஞ் சக்தியை தெய்வபக்தி-நல்லொழுக்கம் முதலியவற்றிற் சிறந்த சிலருடைய ஆத்மா அடையப்பெற்றிருக்கிறதென்று சிலர் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இறந்தகாலத்தில் நடந்த விஷயங்களைப்பற்றியும் நிகழ்காலத்தில் நடந்துகொண்டிருக்கும் விஷயங்களைப்பற்றியும் நாம் கனவுகாண்பதுபோலவே இனி எதிர்காலத்தில் நடக்கப்போகும் விஷயங்களைப்பற்றியும் நம்முடைய மனதில் சில தோற்றங்கள் நிகழ்வது இயற்கைதானென்றும், அவ்வாறு நாம் காண்பவையனைத்தும் தோற்றங்கள் மாத்திரமேயாதலின் அவைகள் நனவில்பலித்தாலும் பலிக்கக்கூடும் பலிக்காமற்போனாலும் போகக்கூடுமென்றும் வேறு சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால் இவ்விஷயத்தை ஐயந்திரிபறச்சொல்வது எவர்க்குங்கூடாது.

95. கே.—இவ்விஷயத்தை நிஷ்கர்ஷையாகச் சொல்வதுகூடாவிடினும் அவ்விருவகையான சித்தாந்திகளும் தமக்கு ஆதாரமாக என்னென்னவிஷயங்களைக் கூறுகிறார்களோ அவற்றைமாத்திரம் கேட்டறிய யான் விரும்புகிறேன்.

ஆ.—கூடியவரையில் தெய்வபக்தியும் நல்லொழுக்கமுமுள்ளவர்களுக்கு எதிர்காலத்திய விஷயங்கள் தூக்கத்தில் சில சமயங்களிலே சரியாகப்புலப்படுகின்றனவென்னும் சித்தாந்திகள் சில சரித்திர பூர்வகமான திருஷ்டாந்தங்களையெடுத்து உதகரிக்கிறார்கள். அவற்றுள் இரண்டொரு சரித்திரங்களை இப்போது சுருக்கிக் கூறுகிறேன்:—

(1) இங்லாண்டில் (Cornwall) காரன்வால் என்னும் பிரதேசத்தின் (Redruth) ரெட்ராத் என்னும் பட்டணத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் மிகவும் ஒழுக்கத்திற் சிறந்தவராகிய (Williams) உல்லியம்ஸ் என்பவர் அக்காலத்து (Chancellor) சான்ஸெலர் என்னும் மந்திராலோசனைச் சபைத்தலைவராகிய (Percival) பெர்ஸிவல் என்பவரை ஒருவன் துப்பாக்கியைக்கொண்டு மேற்படி சபாமண்டபத்தைச்சேர்ந்த ஒரு அறையில் சுட்டுவிட்டதாக 1812-௵ மே௴ 11௳ இராத்திரி அடுத்தடுத்து இரண்டு மூன்று முறை கனவு கண்டார். அவர் அவ்விஷயத்தைத் தம்முடைய மனையாட்டிக்கும் (Tucker) டக்கர் என்னும் வேறொரு பெரிய மனிதருக்கும் மறுநாள் காலையில் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது அதைக் கேட்டுக்கொண்டிருந்த டக்கர் என்பவரும் மற்றவர்களும் இது ஏதோ மனோபிராந்தியாயிருக்கலாமென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொள்ள விருக்கையில், கனவு கண்ட உல்லியம்ஸ் என்பவருடைய குமாரர்களுக்குள் ஒருவன் ஓர் குதிரையின்மேலேறிக்கொண்டு திடுதிப்பென்று தன் பிதா வீட்டுக்குவந்திறங்கினான். சில நாளாகத் தன்னைப்பிரிந்து நெடுந்தூரம் போயிருந்த தன் குமாரனைக்கண்டமாத்திரத்தில் உல்லியம்ஸ் என்பவர் மகிழ்ச்சியோடு "அப்பா! க்ஷேமமா? என்னவிசேஷம்?" என்று கேட்டார். அதைக்கேட்டகுமாரன் "அண்ணா! மற்றவிஷயங்களெல்லாமிருக்கட்டும், நேற்றுமாலை மந்திராலோசனைச் சபாமண்டபத்தில் பெர்ஸிவல் என்னும் சிறந்த உத்தியோகஸ்தரை ஒருகொடிய துன்மார்க்கன் சுட்டுவிட்டான்; அது விஷயமாகப் பட்டணமுழுதும் அல்லோலகல்லோலமாயிருக்கிறது." என்றான். இதைக்கேட்டமாத்திரத்தில் அங்கிருந்த டக்கர் என்பவரும் உல்லியம்ஸ் மனைவி முதலியயாவரும் வியப்புற்று "இதென்ன ஆச்சரியம்! பட்டணத்தில் நடந்த சமாச்சாரம் இதுவரையில் இந்த கிராமத்திலுள்ள எவர்க்கும் தெரியவே தெரியாது, அப்படியிருந்தும் உல்லியம்ஸ் இராத்திரி இரண்டு மூன்று முறை இந்தப்படி கனவுகண்டனரே." என்று ஒன்றும்தோன்றாமல் யோசித்துக்கொண்டிருந்தார்கள். உல்லியம்ஸ் என்பவரும் தாம் கண்டகனவு நனவாய் முடிந்ததைப்பற்றிப் பிரமித்து நின்றார். உல்லியம்ஸ் என்பவர் இவ்விஷயத்தை வேறே ஒருவருக்கும் தெரிவிக்காமலிருக்கும்படி அங்கிருந்தவர்களுக்குச் சொல்லிவிட்டுத்தான் பட்டணத்திற்குப்போய்க்கொன்றவனையும் கொல்லப்பட்ட அதிபதியையும் கொன்றதாகப்பிரஸ்தாபிக்கப்பட்ட இடத்தையும் நேரில்கண்டார். அவர் கொன்றவனையாவது கொல்லப்பட்டவனையாவது கொன்ற இடத்தையாவது அதற்குமுன் ஒருபோதும் பார்த்திலர். அப்படியிருந்தும் அவர் அவ்விருவரும் என்னென்ன உடுப்புகளைத் தரித்துக்கொண்டிருந்ததாகவும், அச்சபாமண்டபத்தில் எந்த இடத்திலே அத்துக்ககரமான செய்தி நடந்ததாகவும் கனவு கண்டாரோ அதற்கே

ற்றபடியே அவ்விவரங்களெல்லாம் இம்மியும் பிறழாமல் ஒத்திருந்ததைப்பார்த்து வியப்புற்றார்.

(2) (William Corder) உல்லியம் கார்டர் என்பவன் (Maria) மேரியா என்பவளைக்கொன்ற விஷயம் ஒரு கனவினால் ஆதியில் கண்டுபிடிக்கப்பட்டதென்று யாவருக்கும் பிரசித்தமாகத் தெரிந்திருக்கிறது. எப்படியெனில், இங்கிலாண்டிலே ஒரு கிராமத்தில் பயிரிடுங் குடியாகிய ஒருவனுடைய அழகிற் சிறந்தபெண்ணாகிய மேரியா என்பவளை உல்லியம்கார்டர் என்பவன் விவாகம்செய்து கொள்வதாய் அவளுக்குறுதிமொழிகூறி அவளுடைய கற்பை யழித்துவிட்டான். உடனே விவாகத்துக்காக அப்பெண்ணின் தாய் தகப்பன்மார் ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கையில் கார்டர் என்பவன் அதற்குமுன்னே தன்னூரில் வேறே ஒருத்தியை விவாகம் செய்திருந்தானாகையால் அவள் உயிரோடிருக்கும்பொழுதே மறு விவாகம்செய்வது இராஜதண்டனைக் குள்ளாக்குமென்றறிந்து அவன் மேரியாவைக்கொன்றுவிட உத்தேசித்து அவளை ஆண்பிள்ளையைப்போல் வேஷம்போட்டுக் கொள்ளச்சொல்லித் தன்னுடன்கூட இட்டுக்கொண்டே நெடுந்தூரத்திலே களத்து மேட்டில் போட்டிருந்த தானியக் கூட்டில் அவளைக்கொன்று ஒருவருக்கும் தெரியாமற்புதைத்துவிட்டு அவளுடைய வீட்டிலேயேவந்து இரண்டொருவாரம் கூடிக் குலாவிக்கொண்டும், காணாமற்போன மேரியாவைத் தானும் தேடுவதுபோல் நடித்துக்கொண்டுமிருந்து பிறகு ஓடிப்போய்விட்டான். மேரியாவின் தாய் தகப்பன்மார் தம்முடைய ஏகபுத்திரிகாணாமற்போன விஷயத்தைப்பற்றி மிகவும் துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். விவாகம் செய்யவிருந்த தருணத்தில் காணாமற்போன மேரியாவைப்பற்றி அக்கம்பக்கத்தில் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். இப்படியிருக்கையில் ஒருநாள் மேரியாவின் தாயார் தன் அருமைப்புதல்வி கொல்லப்பட்டுக் களத்து மேட்டிலிருக்கும் கூட்டினடியில் புதைக்கப்பட்டிருப்பதாகக் கனவுகண்டு தன் கணவனுக்கு அதைச்சொன்னாள். அவனும் ஊரிலிருந்த சிலரும்போய் அக்கூட்டைச் சோதித்துப்பார்க்கையில் மேரியா சின்னபின்னமாகப் புதைக்கப்பட்டிருப்பதை யாவரும் கண்டார்கள். மேரியாவை கார்டர் என்னுங்கொடியோன் இவ்வாறு கொன்று அக்களத்துமேட்டில் அந்த ஸ்தானத்திலே புதைத்துப்போன விஷயம் அந்தக் கிராமத்திலிருந்த ஒருவருக்குந்தெரியாது. அப்படியிருந்தும் அவளுடையதாயார் அவ்வுண்மையைக் கனவிற் கண்டதாக ஒரு சிறந்த கிரந்த கர்த்தர் கூறுகின்றார்.

கனவு சில சமயங்களில் பலிக்கத்தக்கனவாயிருக்கின்றனவென்னுங் கட்சியார் இவைகளைப்போன்ற அநேக விர்த்தாந்தங்களை யெடுத்துக் காட்டுகிறார்கள்.

96. சி.—இந்த சித்தாந்திகள் இவ்வாறு சில விர்த்தாந்தங்களை யெடுத்துக்காட்டியும் இதில் நம்பிக்கையற்ற கட்சியார், எதிர்காலத்திய விஷயங்களைக் கண்டறியும் ஆற்றல் ஆத்மாவுக்குண்டென்பது நிச்சயமாயின் சில சமயங்களில் அப்படிப்பட்ட கனவுகள் பலிக்காமல் ஏன் போகவேண்டுமென்று வினவினால், அதற்கு இவர்கள் என்ன சமாதானங் கூறுகிறார்கள்?

ஆ.—நாம் விழித்துக்கொண்டிருக்கும்போதே நாம் கொள்ளும் எண்ணங்களெல்லாம் நிறைவேறுகின்றனவா? அவற்றுள் சில பலிக்கின்றன; சில பலிக்காமலே போகின்றன; அதுபோலவே கனவில்

ஆத்துமா கொள்ளும் எண்ணங்கள் பலவற்றுள்ளே சில பலிக்கின்றன; சில பலிக்காமலும் போகின்றன; எதிர்காலத்திய விஷயங்களை நினைத்துப்பார்க்கும் சக்தி ஆத்துமாவுக்குண்டென்பதை மாத்திரம் தடுக்க எவர்க்குமுடியாது என்று சமாதானங் கூறுகிறார்கள்.

97. சி.—மூளையின் அணுரூபமான அறைகளினியக்கத்தினால் மனதுக்குத்தோன்றுந் தோற்றங்களே கனவெனப்படுமாதலின் அவைகளின்படியெல்லாம் விஷயங்கள் நனவில் நடக்குமென்று கூறுவது சரியன்றென்று கூறுஞ் சித்தாந்திகள் இதைப்பற்றி என்ன அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள் ?

ஆ.—அவர்கள் இவைபோன்ற விஷயங்கள் தமக்கு அநுபவமில்லையென்றும், அவைகளைப்பற்றி நிஷ்கரிஷையாக எதையுஞ் சொல்ல முடியாதென்றும் சொல்லுகிறார்கள்.

(இன்னும்வரும்.)

## பொறையுடைமையும் மன்னிக்குமியல்பும்.

எந்தெந்தவிஷயங்கள் நம்முடைய விவேகத்திற்கு வெறுப்பைத்தருகின்றனவோ அந்தந்தவிஷயங்களைப்பற்றி நமக்குக் கோபமுண்டாவதும், எந்தெந்தவிஷயங்கள் நம்முடைய விவேகத்திற்கு விருப்பத்தைத் தருகின்றனவோ அந்தந்தவிஷயங்களைப்பற்றி நமக்குச்சந்தோஷமுண்டாவதும் இயற்கையாயிருக்கின்றது. இப்படிப்பட்ட குணத்தை நமக்கு அமைத்துவைத்ததற்காக ஈஸ்வரனுக்கு நாம் மிகவும் நன்றிபாராட்டுதலாயிருக்கவேண்டும். ஏனெனில், நாம் விதிவிலக்குகளுக்குட்பட்டு இன்னது நற்காரியம், இன்னது தீக்காரியம் என்பதை உணர்ந்துகொள்ளும் சக்தியை ஒருவருடைய உதவியில்லாமலே நாம் இயற்கையில் அடைந்திராவிட்டால் இன்னது சரியென்றும் இன்னது சரியல்லவென்றும் எப்போதும் ஒருவர் நமக்குச் சொல்லிக்கொண்டேவரவேண்டிய அவசியமிருக்குமல்லவா ? அது எவ்வளவும் சாத்தியமாகாது. நம் ஒவ்வொருவரிடத்திலும் பகுத்தறிவென்னுங் குணம் அமைந்திருக்கிற காரணத்தினாலே நற்காரியத்தை நாம் செய்யவும் தீக்காரியத்தை விலக்கவும் கூடியவர்களாயிருப்பதுமன்றிப் பிறர் நற்காரியத்தைச் செய்யும்போது உவக்கவும், தீக்காரியத்தைச் செய்யும்போது அருவருத்துக் கோபிக்கவும் நேரிடுகிறது. ஆகையால், கோபம் என்னும் ஒருகுணம் நம்மிடத்தில் அமைந்திருப்பது மொத்தத்தில் ஒருவிதத்திலே நன்மையென்றே தோன்றுகிறது. கோபம் என்னும் குணம் நம்மிடத்தில் முற்றுமிராவிடின் பிறர் எவ்வகையான துன்பங்கள் நமக்கேநேரிற்செய்யினும் நிரபராதிகளான பிறர்க்குச் செய்யினும் அதற்காக அவர்களைத் தண்டித்துப் பரிகாரந்தேடுவது

முற்றுமில்லாமற் போய்விடும். அவ்வாறாய்விடுமாகில் உலகத்தில் பலவகையான கொடுமைகள் நாளாவர்த்தியில் அபிவிர்த்தியாகிச் சகலபிராணிகளும் துக்கசாகரத்தில் மூழ்கவேண்டியதாகும்.

தகாதகாரியங்களைத் தடுப்பதற்குக் கோபமென்னும் குணம் அத்தியாவசியமாயினும் அதற்கு ஒருவரையறை யிருக்கவேண்டும். அவ்வரையறையைமீறி அக்குணத்தை நாம் போகவிடுவோமாகில் அதைக்கேவலம் துர்விநியோகம் செய்தவர்களாவோம். பெரியோர் 'ஆறுவதுசினம்.'' என்று சொல்லியிருக்கும் வசனத்தைச் சிறிது விசாரித்துப்பார்க்குமளவில், சினம் என்னுங்குணம் இல்வாழ்வானாயுள்ள ஒவ்வொருவனுக்கும் இருப்பது நியாயந்தானென்றும், அது வரையறைக்குட்பட்டுத் தணிந்து நிற்கவேண்டுமென்றும் தெரியவருகிறது. அறம் பொருள் இன்பம் என்னும் புருஷார்த்தங்கள் மூன்றையும் லோகோபகாரமாக விளக்கும்பொருட்டு முப்பானூலென்னும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவநாயனாரென்னும் புருஷோத்தமர் தாமியற்றிய நூலிற்கு அக்காலத்தில் மதுராபுரியிலிருந்த சங்கத்துப்புலவருடைய அங்கீகாரத்தைப் பெறும் பொருட்டுச் சென்று சிலநாள் அந்நகரத்தில் தங்கியிருந்தபோது, அந்நூலைப்பார்த்து வியந்துகொண்டிருந்த சங்கத்துப்புலவர்கள் வெகுளாமை, பொறையுடைமையென்னும் அதிகாரங்களில் நாயனார் கூறியிருந்த அற்புதமான கட்டளைகளைப்பார்த்து வியந்து, இவர் இவ்வளவும் வாசாகயிங்கரியமாகத்தான் சொன்னாரோ அல்லது எதார்த்தத்தில் அக்குணங்கள் அவருக்கமைந்திருக்கின்றனவோ கண்டறிவோமென்றெண்ணிச் சில ஏற்பாடுகள்செய்து, நாயனார் இறங்கியிருந்த இடத்திற்கு ஒருவனை அனுப்பினார்கள். அவன் ஒருநாள்காலையில் அவருடைய வீட்டுப்புறந்திண்ணையில் ஒருபக்கமாக ஒளித்திருந்து, உலகமாதாவைப் போன்ற அவருடைய பத்தினியார் முற்றத்தில் சாணந்தெளிப்பதற்காக வெளியேவந்தபோது அந்த அம்மாளுடைய கலையைப்பற்றியிழுத்தான். அவ்விஷயத்தை அப்பெண்கள் நாயகி தமது பர்த்தாவாகிய திருவள்ளுவநாயனாரிடத்திற் போய்ச்சொல்ல அவர் பொறுத்துக்கொண்டு சும்மாவிருந்தனர். மறுநாளும் அத்தீயோன் அவ்வாறே செய்தபோது அம்மாதுசிரோன்மணி மனங்கலங்கி அவ்விஷயத்தைத் தன் நாயகனிடத்திற் போய்ச்சொல்ல அவர் "பெண்ணே! நாம் பொறுத்துக்கொண்டிருப்போம்." என்று சாந்தமாக விடைகூறிச்சும்மாவிருந்துவிட்டார். அக்கொடியோன் மூன்றாம்நாள் காலையில் முன் செய்ததுபோலவே அப்பெண்கள் நாயகத்தின் கலையை மிகக்கொடுமையாக இழுத்தான். அன்றையதினமும் அந்தஅம்மாள் முன்னிரண்டு தினங்களைப்போலவே கூக்குரலோடு உள்ளேசென்று நாயனாரிடத்தில் முறையிட்டுத்துக்கித்தனள். அதுகேட்டு நாயனார் "இதென்ன புதுமை! நிரபராதிகளாயுள்ள நமக்கும் தீமையை விளைக்கத் துணிகிற ஒருவனுமிருக்கிறானல்லவா? இன்னும் பார்ப்போம்." என்

று சொல்லிச் சும்மாவிருந்துவிட்டார். ஆகிலும், அவர் நாலாம்நாளும் அவன் அவ்வாறேவருவானாகில் அவனைத் தண்டிக்கலாமென்றெண்ணிக் கையிலொரு சிறுகோலைவைத்துக்கொண்டு மறுநாள் பிராதக்காலத்தில் தலைக்கடையிலேயே படுத்துக்கொண்டிருந்தார். அன்று காலையிலும் அவருடைய மனைவி வழக்கப்படியே வெளியேவந்தபோது அந்த துஷ்டன் அந்த அம்மாளுடைய கலையைப்பற்றியிழுக்க, உடனே அங்கு சர்வசித்தமாயிருந்த நாயனார் தமது கையிலிருந்தகோலைக்கொண்டு அவனைப்புடைக்கச்சென்றார். அப்போது அவன் ஓடத்தலைப்பட்டான். அவர் அவனைத் துரத்திக்கொண்டே போனார். அவன் அவருடைய கைக்கு எட்டுவதுபோல்நடித்து அகப்படாமலே அவரைத் தன்னைப் பின்தொடர்ந்துவரும்படிசெய்து சங்கத்து வித்துவான்களிடத்திற் போய்ச்சேர்ந்தான். அவனை அவ்வாறெல்லாம் செய்யும்படி ஏவிய சங்கப்புலவர்கள் அவனை வைவதுபோல் நடித்துக்காட்டி நாயனாருக்கு முகமன்கூறி, வந்த இளைப்பாறும்படி சிறிதுநேரம் உட்கார்ந்துபோகவேண்டுமென்று குறையிரந்தார்கள். அப்புலவர்கள் செய்த சூதானமார்க்கத்தை இம்மியும் அறியாத உத்தமகுணசீலராகிய நாயனார் அவர்களோடு சற்றுநேரம் சம்பாஷித்திருந்துபோவதாக உட்கார்ந்தனர். அப்போது அவர்கள்-"சுவாமி! தாங்கள் வெகுளாமையைப்பற்றி அதியற்புதமாகப் பத்து திருக்குறள் பாடியதுமன்றிப் பொறையுடைமையைப்பற்றியும் பத்து திருக்குறள் அருமையாகச் சொல்லியிருக்கின்றீர்களே, அப்படியிருந்தும் தேவரீருக்கு இப்போது சினம் வந்ததே." என்றார்கள். அதுகேட்டு நாயனார் புன்சிரிப்புடன் தம்முடைய திருக்குறளைத்தருவித்து அச்சங்கத்துப்புலவர்களிடத்திலேயே கொடுத்து, "ஓ! புலவீர்காள்! நான் பொறையுடைமையை எந்த இயலிலும், வெகுளாமையை எந்த இயலிலும் வைத்திருக்கிறேன் பார்த்துக்கூறுங்கள்." என்றார். பொறையுடைமை என்னும் அதிகாரம் இல்லற இயலிலும் வெகுளாமையென்னும் அதிகாரம் துறவற இயலிலும் இருக்கக்கண்டு அப்புலவர்கள் அவருடைய கருத்துயாதென்றுகேட்க, நாயனார் அடியில்வருமாறு சமாதானங் கூறலாயினார் :—

"இல்வாழ்வானாயிருக்கிற ஒவ்வொருவனுக்கும் கோபம் சிற்சில சமயங்களில் உண்டாகவேண்டுவது நியாயந்தான். ஆனால் அது அளவுகடந்துபோகக் கூடாதென்பதைத் தெரிவிக்கும்பொருட்டுப் பொறையுடைமை யென்னும் அதிகாரத்தை இல்லற இயலிலும், முற்றத்துறந்த ஞானிகளாகிய துறவிகளுக்கு விருப்புவெறுப்பேயில்லையாகையால் அவர்களுக்கு எவ்வளவும் கோபமுண்டாதல் கூடாதாதலின் வெகுளாமையைத் துறவற இயலிலும் வைத்தேன்."

இந்த நியாயத்தைக்கேட்டு அப்புலவர்கள் அவரைத் தம் இருப்பிடத்திற் கனுப்பிவிட்டு, இவ்வுத்தமகுணசீலர் இல்வாழ்க்கையி

விருக்கின்றவராகையால் அவர் மூன்றுதினங்களாகப் பொறுத்து நாலாம்நாள் சிறிதுகோபங்கொண்டவராகி அதையும் உடனே தணித்துக்கொண்டனர்; இவரல்லவோ மகானுபாவர்? என்று தமக்குள் வியந்து திருக்குறளென்னும் அவ்வரிய நூலை மிகவும் நன்கு மதிக்கலாயினர்கள்.

ஆகையால், இல்வாழ்க்கையிலுள்ள ஒவ்வொருவனுக்கும் மிகவும் அநீதியான காரியங்களைப்பார்க்கும்போது கோபம்வருவது இயல்பேயாயினும் அதைவரையறைப்படுத்துவது அவனுடைய பெருங்கடமையென்றேற்படுகின்றது. ஏனெனில், எவனொருவன் கோபத்தை நீடித்துத் தன்னிடத்தில் நிலைபெறச்செய்து கொள்ளுகிறானோ அவன் பற்பலவியாதிகளுக்குள்ளாகி அல்லற்படுவானென்பது சரீரதத்துவ சாஸ்திர சித்தாந்தம். அதிசீக்கிரத்தில் கோபித்துக் கொள்பவர்களும், யாதொரு விஷயத்தைப்பற்றியெழுந்தகோபத்தை உடனேதணித்துக்கொள்ளாமல் அதை வளர்த்துக்கொண்டு வருபவர்களும் சீக்கிரம் இறந்துபோகத்தக்கவர்களாயிருக்கிறார்களென்று உலகசரித்திரத்தினால் தெரியவருகிறது. யாதொரு தகாத காரியத்தைக் கண்ட மாத்திரத்தில் கோபம் வருவதுபோலவே, அக்காரியத்தைச் செய்த ஒருவனை மன்னிக்கத்தக்க இயல்பும் சுலபமாய் ஒவ்வொருவரிடத்திலு மிருக்கவேண்டும். உலகத்தில் மனதினாலேயாவது வாக்கினாலேயாவது காயத்தினாலேயாவது குற்றஞ்செய்யாத மனிஷ்யனேயில்லை. எல்லாங் குற்றவாளிகளே. ஆகையால், பிறருடைய குற்றங்களைக் காணும்போதெல்லாம் அடிக்கடி கோபங்கொள்ளவேண்டிவரும். அதை உடனே அடக்கிக்கொள்ளும் இயல்பை நாம் அபிவிர்த்திசெய்து கொள்ளாவிட்டால் பெருந்தீமைகள் விளைவதற்கிடமுண்டு. குற்றஞ்செய்த ஒருவன் தன்குற்றத்தை ஒப்புக்கொள்வது அவனுக்கு எல்லாவிதத்திலும் பெருமையாகும்; அதை அவ்வாறு ஒப்புக்கொள்ளாமல் அதற்குப்போலி நியாயங்களைக் கற்பித்துத் தன்னை நிரபராதியென்று மனச்சாட்சிக்கு விரோதமாகச்சொல்லிக்கொள்வது எவ்வளவும் மானுஷீகமன்று. எவனொருவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு துக்கிக்கிறானோ அவன் மீண்டும் அதுபோன்ற குற்றத்தைச் செய்யாமலிருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. நமவிஷயத்தில் ஒருவன் ஏதோ ஒருவகையினால் அபசாரப்பட்டானென்று வைத்துக்கொள்வோம். அவ்வபசாரத்தால் நமக்குத் துக்கமும் கோபமும் உண்டாயிற்றென்று தெரிந்துகொண்ட மாத்திரத்தில் அவன் தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொள்வானாயின் உடனே அவ்வபசாரத்தைமுற்றும் மறந்து சாந்தமுடையவராய்ப் பண்டுபோலவே சிநேகம் பாவிப்பதுதான் உத்தமகுணம். அவ்வாறின்றிக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் நேரஸ்தன் நம்மைவந்து வணங்கி க்ஷமிக்கும்படி வேண்டிக்கொண்டானென்று பல்லோரும் அறிய அலர்தூற்றுதல் எவ்வளவும் நற்குணமாகவேமாட்டாது

நிரபராதியாயிருந்த நமக்குத் தீங்கிழைத்த ஒருவனிடத்து நமக்குண்டாகிய கோபத்தைத் தணித்துக்கொள்வதேயன்றி உடனே அவனுக்கு நம்மாலியன்றபேருதவியுஞ்செய்து விடுவது உத்தமகுணங்கள் யாவற்றுள்ளும் நடுநாயகம்.

இலங்கையாகோனாகிய இராவணேஸ்வரனுடைய சகோதரராகிய விபீஷணர் ஸ்ரீராமமூர்த்தியினிடத்தில் சரணாகதியடைந்தபோது அவ்வமலமூர்த்தி அவர்க்கு அபயந்தந்து, இலங்காபுரியின் இராச்சியபட்டாபிஷேகம் உமக்கே செய்வோமென்று வாக்குதத்தஞ்செய்தபோது, அருகிலிருந்த இளையபெருமாளாகிய இலட்சுமணர் - "அண்ணா! இதென்ன விபரீதம்! மகாகொடியோனாகிய இராவணனுடைய சகோதரன் இவன், இவன் உத்தம குணசீலனைப்போல் இங்கு நடிக்கிறான், இராட்சதகுலத்திற்குரிய இயற்கைக்குணங்கள் இவனைவிட்டகலுமா? பகையாளியின்குடியை உறவாடிக்கெடு என்னும் பழமொழியை யனுசரித்து இவன் நம்மை வஞ்சிக்கவந்தவனாயிருக்கலாம்." என்றார். அதுகேட்டு, ஸ்ரீராமப்பிரபு - "அப்பா! நீசொல்வதெல்லாம் வாஸ்தவமாயிருக்கினும், அவன்வந்து நம்பால் சரண்புக்கான், அவன் எத்திறத்தவனாயினுமாகுக, நமக்கு என்ன தீமை விளையினும்விளைக, சரணடைந்தவரைக் காப்பது பரமபுருஷார்த்தம்." என்று நியாயங்கூறினார். அதுகேட்டு, இளையபெருமாள்—"அண்ணா! இப்போது சரண்புகுந்த விபீஷணனுக்குத்தான் இலங்காபுரியை அளித்துவிட்டீர்; இராவணனே ஒருக்கால்வந்து சரண்புகுவானாயின் அவனுக்கு எதைக்கொடுக்கப்போகிறீர்?" என்றுகேட்க, அதற்குச் சாந்தமூர்த்தியாகிய ஸ்ரீரகுநாதர்—"அப்பா! என்னுடைய அயோத்தியின் இராச்சிய பட்டாபிஷேகத்தையே அவனுக்குச் செய்துவிட்டு யான் வனத்திலேயே சுகித்திருப்பேன்." என்று விடைபகர்ந்தனர். மகா கொடுமைகளையெல்லாம் விளைத்த இராவணன் தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொண்டு, தன்னை க்ஷமிக்கும்படி சரண்புகுவானாயின், அவனை க்ஷமிப்பதேயன்றி அவனுக்குத் தம்முடைய இராச்சிய முழுவதையுங்கொடுத்துப் பட்டாபிஷேகமும் செய்வதாக உறுதிமொழிகூறிய இரகுகுலதிலகரல்லவோ சர்வலோக சரண்யரெனப்படுவர்! ஸ்ரீராமமூர்த்தி முதலியோர் தெய்வ அம்சங்களானபடியால் அவர்கள் அவ்வாறு செய்தனர்; மானிடரெவரேனும் பிறர் தமக்குச்செய்த குற்றங்களைப் பொறுத்ததுமன்றி அவர்களுக்குத் தம்மாலாகிய பேருதவியைச் செய்ததுமுண்டா? என்னும் சந்தேகம் சிலர்க்கு நிகழக்கூடுமாகையால் ஐரோப்பாவிலிருந்த சில புருஷரத்தினங்களின் விருத்தாந்தங்களைப் பின் வருமாறு சுருக்கிக் காட்டுவோம்:-

1. (Italy) இட்டெலி என்னும் தேசத்திலுள்ள (Faenza) பேயன்ஜா என்னும் பட்டணத்தில் ஒருவன் வேறொருவன்மேல் ஏதோ சிலகாரணங்களினாலே நெடுநாளாகப் பகைமைகொண்டிருந்து, அவன் ஒருநாள் தனியே இரவில் போய்க்கொண்டிருந்தபோது அவனுடைய

இரண்டுகண்களையும் பிடுங்கிவிட்டான். கண் குருடாய்விட்டவன் மிகவும் அல்லற்பட்டுக்கொண்டே, அவ்வூரிலிருந்த ஒரு தர்மமடத்தைப் போய்ச்சேர்ந்து அங்கு ஒருவாறு ஆதரிக்கப் பட்டுவந்தான். அவன் குருடனாயிருந்தும், தன்னைப்போலவே ஆதரவற்று அங்குவந்து சேரும் பிணியாளர்களுக்குத் தன்னாலியன்ற உபசாரங்களைச் செய்துகொண்டேவருவது வழக்கம். இப்படியிருக்கையில், சிலகாலம்பொறுத்து, முன்னே கண்ணைப்பிடுங்கிவிட்ட துஷ்டன் ஓர்வகையான தீராவியாதியினாலே பீடிக்கப்பட்டு மிகவும் ஆதரவற்றிருக்கையில் அவனை அவனுடைய பந்துக்கள் அத்தர்மமடத்தில் கொண்டுபோய்விடுவதற்காகத் தூக்கிக்கொண்டு போனார்கள். அப்போது அவன் அவர்களைப் பார்த்து, "ஐயையோ! என்னைவேறு எவ்விடத்திற்குக்கொண்டுபோனாலும்கொண்டுபோங்கள், அத்தர்மமடத்திற்கு மாத்திரம் கொண்டுபோகவேண்டாம்; ஏனெனில், என்னுடைய ஜென்மப் பகையாளியாகிய குருடனொருவன் அங்கிருக்கின்றான், அவனால் எனக்கு ஏதேனும் ஆபத்துவிளையும்." என்று சொல்லியும் அவர்கள் கேளாமல் கொண்டுபோய் அம்மடத்தில் அவனைக் கிடத்திவிட்டுப் போய்விட்டார்கள். தன்னுடைய கண்ணைப்பிடுங்கிவிட்ட பழைய பகையாளி இப்போது மடத்திற்கு வந்தானென்பதைக் கேட்டமாத்திரத்தில் அக்குருடன் விரைந்தோடிவந்து அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்து தன்னிடத்து இலேசமும் அவனுக்குச் சந்தேகமிருக்கவேண்டியதில்லையென்று அவன் மனதைத்தேற்றி, அம்மடாதிபதியின் அநுமதியின்மேல் தானே அவனுக்குப் பத்தியங்கொடுத்தல் முதலிய எல்லாச் சிகிச்சைகளையுஞ்செய்து அவனைக் கண்மணிபோற் பாதுகாத்து வந்தான். சிலநாளையில் பிணியாளி வியாதி நீங்கித் தேகாரோக்கியம்பெற்று வீடுபோய்ச்சேர்ந்தான். அக்குருடன் தனக்குச் செய்துவந்த உபசாரங்களனைத்தையும் அவன் நினைக்கும்போதெல்லாம் அவனுடைய நெஞ்சம் துடித்து, "என்னைவிடக் கொடும்பாவியும் உலகத்திலுண்டோ?" என்று பெருமூச்சு விட்டுவந்தான்.

2. மத்தியதரைக்கடல் தீரத்திலுள்ள (Genoa) ஜினோவா என்னும் பட்டணம் வர்த்தகமுதலியவிஷயங்களில்மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. அப்போது அவ்வூரிலிருந்த சில பெரிய மனிஷ்யாளே அதை அரசாண்டுவந்தார்கள். அப்படிவருகையில், அவர்கள் குடிகளை மிகவும் இம்சித்துக் கொடுங்கோலரானபோது குடிகள் ஆற்றாதவர்களாகிக் கலகம்பண்ணி அப்பெரிய மனிஷ்யாளை நீக்கிவிட்டு வேறே சிலரை அதிபதிகளாக நியமித்துக்கொண்டார்கள். இவ்வாறு சீர்திருத்தஞ்செய்த குடிகளுக்குள் முதலாளியாயிருந்தவன் (Uberto) யுபெர்ட்டோ என்பவன். உடனே அப்பெரிய மனிஷ்யாள் தங்களுடையசெல்வபலத்தினால்பிறருடைய சகாயத்தைக்கொண்டு அக்குடிகளை யடக்கி, அவர்களால் நூதனமாய்நியமிக்கப்பட்டவர்களைத் துரத்திவிட்டுமீண்டும் அரசைக்கைப்பற்றினார்கள். அப்போது அப்பெரிய மனிஷ்யர்களுக்குள்

முதல்வனாயிருந்த (Adorno) அடார்னோ என்பவன் அக்குடிகளிடத்து மகா கோபாவேசங்கொண்டவனாகி, கலகத்துக்கு முதல்வனாயிருந்த யுபெர்ட்டோ என்பவனைத் தன் முன்னிலையில் வரவழைத்துப் பலருங்காண "இழிகுலத்திற்பிறந்த தொழிலாளிமகனே! நீயல்லவோ இவ்வளவு கலகத்திற்குங் காரணம்? உனக்குத் தீவாந்தர சிட்சை விதித்துவிட்டேன், இனி இவ்வூருக்கு நீ வரக்கூடாது, போய்விடு." என்று அவனை மனம் புழுங்கவைத்து அனுப்பிவிட்டான். அதுகேட்ட யுபெர்ட்டோ என்பவன் அவ்வூரைவிட்டு மரக்கலமேறி வேறொரு இராச்சியத்திற்சென்று அங்கு சிலநாள் மிகச் சாமானியனாகவிருந்து நாளாவர்த்தியில் தன்னுடைய புத்திகோசரத்தினாலும் விடாமுயற்சியினாலும் தனவானாயினான். அப்படியிருக்கையில், அவன் ஒருநாள் அந்த இராச்சியத்தைச் சேர்ந்த மற்ற பட்டணங்களை ஏதோ காரியார்த்தமாகப்பார்க்கச் சென்றபோது அங்கு ஒரு தனவானுடைய வீட்டுக் கொல்லையில் ஒரு சிறுவன் வேலைசெய்துகொண்டிருந்ததைப்பார்த்தான். அச்சிறுவன் வேலையின் கொடுமைக்கு ஆற்றாதவனாகி இருந்திருந்து இளைப்படைந்து தெய்வமே! தெய்வமே! என்று அலறிக்கொண்டிருந்தான். அவனைக்கண்டு மனஞ்சகியாதவனாகி யுபெர்ட்டோ என்பவன் அவனருகிற்சென்று அவனுடைய விர்த்தாந்தங்களைக்கேட்க, அச்சிறுவன் தனக்குத் தீவாந்தரசிட்சை விதித்த அடார்னோ என்பவனுடைய அருமைப்புதல்வனென்றும், அந்த ஜினோவா பட்டணத்து அதிபதிகளோடு போர்புரிந்து வெற்றிகொண்ட பகைவர்கள் கையில் அச்சிறுவன் அகப்பட்டுக்கொண்டானென்றும், அவனைத்தற்காலத்திய எஜமானனாகிய மகம்மதியனொருவன் தனக்கு அடிமையாளாகவிருக்கும்படி விலைக்கு வாங்கிவிட்டானென்றும் சங்கதி தெரியவந்தது. உடனே அச்சிறுவனுடைய எஜமானனாகிய மகம்மதியனிடத்து யுபெர்ட்டோ என்பவன் சென்று, அவன் கூறியவிலையைக் கொடுத்துவிட்டு அச்சிறுவனைத் தன்வீட்டிற்கழைத்துவந்து தன் அருமைப்புதல்வனைப்போல் அவனைச் சிலநாள் வீட்டில் வைத்திருந்து ஜினோவாதேசத்திற்குப்போகும் மரக்கலமொன்று தன் ஊரைவிட்டுப் புறப்பட்டபோது, அதில் அச்சிறுவனையேற்றி வழிக்குவேண்டியபல காராதிகளையும் அவனுக்குத் தந்து அவனைப்பார்த்து, "பிள்ளாய்! என்னுடன் கூடவே உன்னை எப்போதும் வைத்திருப்பேன், உன் மாதாபிதாக்களைப்பார்க்கவேண்டுமென்கிற எண்ணம் உனக்குண்டாகக்கூடும், அதற்கு விரோதம்செய்ய எனக்குச் சம்மதியில்லை, நீ க்ஷேமமாய் வீடுபோய்ச்சேர், ஆனால் நீ எனக்குச்செய்யவேண்டிய நன்றியொன்றுளது, அது யாதெனில்—நீ ஊரைப்போய்ச்சேர்ந்தவுடனே முன்பாக உன் வரவைப்பற்றித் தெரிவிக்காமலே உன்பிதாவைப் போய்ப்பார், அவர் நீவந்த விவரங்களைக்கேட்டால் இக்கடிதத்தை அவருக்குக் கொடுத்துப் பிறகு நீ நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லலாம்." என்று கூறி அச்சிறுவனிடத்து ஒருகடிதத்தைக் கொடுத்து அவனை ஆசீர்வதித்து

அனுப்பிவிட்டான். அச்சிறுவன் அவ்வாறே வீடுபோய்ச்சேர்ந்து தன்பிதாவுக்கு முன்போய் நின்றமாத்திரத்தில், அடார்னோ என்பவன் அவனைக் கண்டவுடனே மெய்மறந்து, "ஆ! ஆ! நானிப்போது காண்பது கனவா? நனவா?" என்று ஐயுற்றுத் தன் புதல்வனை ஆலிங்கனஞ்செய்துகொண்டு ஆனந்த பாஷ்பம் பொங்கி மேலெழுந்து கண்வழியாக ஆறுபோற் பெருகிவரப் பரவசமுற்றான். அப்போது அவன் தன் புதல்வனை நடந்த விர்த்தாந்தங்களைக் கூறும்படி கேட்டபோது அச்சிறுவன் யுபெர்ட்டோ என்பவன் தன்கையிற் கொடுத்த கடிதத்தைப் பிதாவின்கையில் நீட்டினான். அதை அவன் பிரித்துப் பார்த்தபோது அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது:—

"ஓ பிரபுவே!

உம் அருமைப்புதல்வனை அடிமையினின்றும் நிவர்த்தித்து உம்மிடத்தில் அனுப்பியவன், 'இழிகுலத்திற் பிறந்த தொழிலாளி மகனும்' உம்மால் தீவாந்தரசிட்சை விதிக்கப் பெற்றவனுமாகிய யுபெர்ட்டோ."

இக்கடிதத்தைப் பார்த்தமாத்திரத்தில் அடார்னோ என்பவன் மெய்நடுக்கங்கொண்டமையால் அவன் கையிலிருந்த கடிதம் பொத்தென்று கீழேவிழுந்துவிட்டது. அவனுடைய முகம் சிவந்தது. அவன் தன் இரண்டு கைகளாலும்முகத்தில் அறைந்து கண்களைமூடிக்கொண்டான். தன் பிதாவின் கோலாகலத்தைக்கண்ட சிறுவன் அவனுடைய மனதின்நிலைமையை யறியாதவனாகி மேலும் மேலும் யுபெர்ட்டோ என்பவன் தனக்குச்செய்துவந்தஉபகாரங்களையெல்லாம்விரிவாயெடுத்துச்சொல்லிக்கொண்டுவரும்போது அந்தப்பிரபுவுக்குண்டான வெட்கம் இப்படிப்பட்டதென்பதைக்கடவுளேயறிவார். பிறகு அவன்ஒருவாறு மனந்தேறித் தன் நண்பர்களாகிய மற்ற அதிபதிகளுக்கு இவ்விஷயத்தைப்புலப்படுத்தி அத்தீவாந்தரசிட்சையை மாற்றுவித்து யுபெர்ட்டோஎன்பவனை மீண்டும் தன் பட்டணத்திற்குவரச்செய்தான்.

ஆகையால், இதுபோன்ற உத்தமர்களுடைய சரித்திரங்களை நாம் வாசிக்கும்போது,

"இன்னாசெய்தாரையொறுத்தலவர்நாண
நன்னயஞ்செய்துவிடல்."
"மிகுதியான்மிக்கவைசெய்தாரைத்தாந்தம்
தகுதியான்வென்றுவிடல்."
"ஒறுத்தார்க்கொருநாளையின்பம்பொறுத்தார்க்குப்
பொன்றுந்துணையும்புகழ்."

என்னும் உத்தரவேத ஆப்தவசனங்களின் உண்மை இனிது விளங்குகின்றது.

## பாலிய விவாகத்திற்கு மூலகாரணம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கனுள் மூன்றாவதாகிய இன்பத்தை ஒருவன் அடையவேண்டு

மானால் "காதலிருவர்கருத்தொருமித் தாதரவு பட்டதேயின்பம்." என்றபடி மனையாளோடு ஒத்தமனதுடன் இல்வாழ்க்கையை நடத்துவது அத்தியாவசியம். இதற்காகத்தான் விவாகஞ்செய்துகொள்வது, இல்வாழ்க்கையினாலடையத்தக்க இன்பத்தை யநுபவிப்பதற்கேற்ற பருவம் ஸ்திரீபுருஷர்களுக்கு எப்போதுவருகின்றதோ அப்போதுதான் விவாகம் நடத்தவேண்டுமென்பது தற்காலத்திலே நாகரீகமடைந்த ஒவ்வொரு ஜாதியாருடைய கோட்பாடாயிருக்கிறது. தற்காலத்தில்நம்முடைய புத்திக்கும் அந்தவேற்பாடுஒத்ததாயிருக்கிறது. அப்படியிருந்தும்,நாகரீகத்தில் மிகவும் மேம்பட்டிருந்த இந்துக்கள் பூர்வம் பாலியவிவாகத்தை அபிவிர்த்தி செய்துவந்ததற்குக் காரணம் எதுவாயிருக்கலாமென்று யோசித்துப்பார்க்கையில், அடியிற்கண்டதாயிருக்கலாமென்று ஒரு சாஸ்திரியார் பலவித்துவான்கள் கூடிய சபையில் அடியில்வருங் கருத்துகளடங்க அதிவினோதமாகப் பிரசங்கித்தனர்:—

"ஆண்பிள்ளைக்குப் பெண்பிள்ளையினிடத்தும் பெண்பிள்ளைக்கு ஆண்பிள்ளையினிடத்துமுண்டாகத்தக்க விருப்பமானது மனதில் தோன்றத் தொடங்குங்காலத்திலேயே யாரிடத்தில் அவ்விருப்பம் பிரதமத்திற் செல்லுகின்றதோ அவரிடத்தில் ஆயுள்வரையில் அது இடையறாது சலனமற்றுநிற்குமென்பது மனோதத்துவலட்சண சாஸ்திரத்தின் கோட்பாடாயிருக்கின்றது. இது மானிட இயல்பு. எப்படியெனில்? பாலியகாலத்தில் இருவர் ஒருசாலை மாணாக்கர்களாக ஒருவரோடொருவர் அதிக சிநேகமாயிருந்தார்களென்று வைத்துக்கொள்வோம். பிறகு நெடுங்காலம்வரையில் ஒருவரையொருவர் பாராமலிருந்தபோதினும் மீண்டும் அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்க நேரிடுமாகில் அவர்களுக்குண்டாகும் சிநேகவாஞ்சை இவ்வளவவ்வளவல்ல. வயது முதிர்ந்தபிறகு நாம் சிலரிடத்தில் எவ்வளவு அன்னியோன்னியமாகச் சிநேகம் செய்தபோதினும் அந்த சிநேகம் அவ்வளவாக நீடித்து நில்லாது. பாலியசிநேகம் பசுமரத்தாணிபோன்றது. இதை ஒவ்வொருவரும் அநுபவவாயிலாகக் காணலாம். இதுபோலவே யாதொரு ஆணும் பெண்ணும் அதிபாலியதிசையிலேயே கணவனென்றும் மனைவியென்றும் அளவளாவிக்கொண்டிருப்பார்களாகில், ஒருவரையொருவர் இன்பத்திற்காக இச்சிப்பதற்குரிய பருவம் வரும்போதே வேறொருவரிடத்தும் தம்மனம் செல்லாமல் பரஸ்பரம் தத்தம்மிடத்தே ஸ்பரிசவுணர்ச்சி முதலியவற்றால் அவ்விருப்பம் சென்றுவிடும். இவ்வாறு சென்ற விருப்பம் உயிர்நீங்குமளவும் விட்டகலாது. பாலியவிவாகம் ஆதியிலிருந்தபடியினால்தான் தம்பதிகளுக்கு இடையறாத அன்பும் அதுகாரணமாக உடன்கட்டையேறுதலென்னும் வழக்கமும் பூர்வம் நடைபெற்றுவந்தன. முற்காலத்தில் உடன்கட்டையேறியபோது ஸ்திரீகள் கணவர்களின் பிரிவாற்றாமை மிகுதியினாலே மனப்பூர்த்தியாய் வலிய ஏறி உயிர் மாய்த்துக்கொண்டனரேயன்றிப் பிறரால் நிர்ப்பந்திக்கப்பட்டிலர். அவ்வளவு பிரிவாற்றாமையும்

நக்க மிகுதியும் அக்காலத்தில் அவர்களுக்கிருந்ததற்குக் காரணம் அதிபாலியகாலந்தொடங்கிப் புருஷர்களிடத்தில் காதல்கொண்டிருந்ததேயாம். நாளாவர்த்தியில் பற்பல காரணங்களினாலே பூர்விக ஏனைய ஏற்பாடுகள் கெட்டுக்கொண்டுவருவதுபோலவே பாலிய விவாக ஏற்பாடும் கெடத்தொடங்கியிருக்கவேண்டும். அது கெடுதலும் ஸ்திரீ புருஷர்களுக்கிருந்த காதலும் வரவரக் குறைந்துகொண்டேவந்திருக்கவேண்டும். அக் காரணமாக, பிரிவாற்றாமையினால் ஸ்திரீகள் தாமே வலிய உடன்கட்டையேறுதற்குச்சம்மதமற்றவர்களாயிருந்தபோது பிறர் அவர்களை நிர்ப்பந்திப்பது அதர்மமாகத் தோற்றியபடியால் அவ்வழக்கத்தை அரசர்கள் நிறுத்தவேண்டியதாய் நேரிட்டது. மகம்மதியர்முதலிய சில கொடுங்கோன் மன்னருடையகாலத்திலே அவர்களுடைய பரிஜனங்கள் நம்முன்னோராகிய சுதேசிகளுடைய ஸ்திரீகளைத் தூக்கிக்கொண்டுபோய் விடுவதென்னும்வழக்கமிருந்தபடியால் நம்தேசத்துக்குடிகள் அவ்வரசர்களிடத்தில் முறையிட்டுக் கொண்டபோது அவ்வரசர்கள் விவாகமான ஸ்திரீகளை மாத்திரம் அவ்வாறு அபகரித்துச் செல்வதுகூடாதென்று ஒருவிதி ஏற்படுத்தியிருந்தனராகையால் நம்முன்னோர் தத்தம் பெண்களைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டு அதிபாலியத்திலேயே விவாகம் செய்வதென்னும் வழக்கத்தையநுசரித்திருக்கலாமென்று சிலர் யூகிக்கிறார்கள். ஆனால் பாலிய விவாகம் வேதசம்மதமானதாயிருப்பதால் அவர்கள் சொல்லும் காரணம் ஒப்புக்கொள்ளத்தக்கதாகவில்லை.”

மேற்கண்ட நியாயங்களையெடுத்துக்காட்டிய சாஸ்திரியார் சமஸ்கிருதத்தில் மஹாவித்வசிரோமணியாகையாலும், அவர் பிரசங்கித்துக்கொண்டிருந்த சமயத்தில் சபையார் கரகோஷ்டம் செய்து சவாஸ்! சவாஸ்! என்று பிரசங்கத்தை நன்குமதித்தபடியாலும் அப்பிரசங்கத்தின் தாற்பரியத்தை இங்கெடுத்து யாம் கூறினோம். இப்பிரசங்கியாரெடுத்துக் கூறிய நியாயமானது, பாலிய விவாகத்தின் யுக்தாயுக்தத்தைக் குறித்துத் தற்காலத்தில் வாக்குவாதம் செய்துவரும் இருதிறத்தினரும் தத்தம் சித்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னர் தம்மால் சிந்திக்கற்பாலதே.

## இந்து விவாகச் சடங்குகள் சிலவற்றின் சாஸ்திரோக்த சரித்திர பூர்வகவிவரணம்.

(தொடர்ச்சி.)

8. கலியாணமண்டபத்தில் அரசமரத்தின் கிளையையும் ஆலமரத்தின் கிளையையும் கலியாண முருக்கமரத்தின் கிளையையும் ஒன்றுகக்கட்டி அவற்றை மூன்று சுமங்கலிகள் கொண்டுவந்து தம்பதிகளுக்கெதிரே ஒருபுறத்தில் நடுவதும், அவற்றிற்கு அபிஷேகஞ்செய்து பலஉபசாரங்கள்பண்ணுவதும் இந்துக்களுடையவழக்கமாயிருக்கிறது.

இதற்குக்காரணமுண்டு. பிரபஞ்சவாழ்க்கைக்குச் சிருஷ்டி திதி சங்காரம் என்னும் தொழிலை நடத்து[illegible]ா விஷ்ணு உருத்திரர் என்னும் மும்மூர்த்திகளையும் வழிபடவேண்டுவது அவசியமென்பது ஆரியர்களுடைய மரபாதலின், பிரமாவுக்கு அறிகுறியாக அரசையும் விஷ்ணுவுக்கு அறிகுறியாக ஆலையும் உருத்திரர்க்கு அறிகுறியாகக் கலியாணமுருக்கையும் வழிபடவேண்டியதாயிற்று. அம்மூவரின் சத்தியம் சந்[illegible]ாகிய சரஸ்வதி, லட்சுமி, பார்வதி என்னும் தேவிகளுக்கு அறிகுறியாக மூன்று சுமங்கலஸ்திரீகள் அவ்விடத்தில் நிற்கின்றனர்.

9. அம்மி மிதிப்பதென்னும் வழக்கமொன்று விவாககாலத்திலே இந்துக்களால் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இதுவிஷயத்தைப்பற்றிப் பலர் பலவாறாக அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். கற்புநிலைதவறிய அகலிகை என்பவள் தன்னுடைய நாயகராகிய கௌதமரால் கல்லாகச் சபிக்கப்பட்டபடியால் அப்பூர்வ விர்த்தாந்தத்தை மணமகன் மணமகளுக்கு நினைப்பூட்டுவதற்காக ஏற்பட்ட சடங்கென்று பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

10. மணமகனும் மணமகளும் அருந்ததி பார்ப்பதென்னும் சடங்கை இந்துக்கள் கலியாணகாலத்தில் நடத்திவருகிறார்கள். வசிஷ்டரென்னும் தவசிரேஷ்டருடைய மனைவியாகிய அருந்ததியென்னும் தேவியார் கற்பில்மிகச்சிறந்தவரென்பதும், அந்தத் தேவியாரே துருவநட்சத்திரமாக உலகத்துக்குபகரித்துக்கொண்டு வருகிறாரென்பதும் இந்துக்களுடைய நம்பிக்கையாதலின், மணமகன் மணமகளுக்கு அத்தாரகையைக்காட்டி அது எப்படி உத்தரதுருவத்தையகலாது நின்ற நிலையிலேயேயிருந்து கற்புக்கறிகுறியாக இருக்கின்றதோ அது போலவே நீயும் கற்பைவிட்டகலுவதில்லையென்று கட்டுரை கூறச்சொல்லும் வழக்கமேற்பட்டிருக்கிறது.

இம்மாதிரியாகவே இந்துக்கள் விவாககாலத்திலே நடத்திவரும் எண்ணிறந்த சடங்குகளுக்கெல்லாம் சாஸ்திரோக்த சரித்திர பூர்வக நியாயங்களுள. இச்சடங்குகளைப் பார்க்கும் அன்னியதேசத்தவர்களுக்கு அவற்றின் உண்மை விளங்காமலிருக்கிறபடியால் அவர்களுக்கு அவற்றின் தாற்பரியங்களை ஒருவாறாக உணர்த்தவெண்ணி அவற்றுள் முக்கியமான சடங்குகளின் காரணங்களைச் சுருக்கமாகஎடுத்துக்காட்டி இம்மட்டில் இவ்விஷயத்தை முடிவுசெய்தோம்.

## வர்த்தமானக் குறிப்பு.

**பூனாவில் இந்து மாணாக்கர்கள்.**—பூனாவிலுள்ள இந்து மாணாக்கர்களெல்லாம் சில நாளைக்குமுன் ஒன்றுசேர்ந்து ஒருசபைகூடி, இத்தேசத்தவர்கள் ஐரோப்பியரைப்போல் உடைதரித்துக் கொள்வதனால் பலவிதமான பிரதிகூலங்களிருக்கின்றனவென்று தீர்மானித்துத் தாம் கூடியவரையிலே இனி சுதேச மாதிரியான உடைகளையே எல்லாக்காலங்களிலும் தரித்துவரவேண்டுமென்று ஒரு உறுதி செய்துகொண்டார்களாம்.

PRINTED AT THE ALBINION PRESS :—MADRAS.

ஸ்ரீ:

## நீதியும் விநோதமுமான விஷயங்களைக் கொண்டிருக்கிற மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

1889௵ டிசம்பர் மாதத்திய சஞ்சிகையோடு முடிவாகிற 20-வது புஸ்தகம் இப்போது பூர்த்தியாகிச்சித்தமாயிருக்கிறது. அந்தந்த மாதத்திய சஞ்சிகை அந்தந்தமாத முதலிலேயே இனிமேல் வெளிப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. 1890௵த்துக்காக சந்தாதொகைகளை அனுப்பிவிடும்படி கையொப்பக்காரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்; அவற்றைப் பெற்றுக்கொண்டபிறகு சஞ்சிகைகள் வெளியாகுந்தோறும் அனுப்பிக்கொண்டுவரப்படும்.

### சந்தா விவரம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| முன்னதாகச் செலுத்தவேண்டிய ஒரு வருஷத்திய சந்தா தொகை. | 1—8—0 |
| ஒரு வருஷத்துக்கு தபால் செலவு | 0—6—0 |

(முன்னதாகச் செலுத்தவேண்டிய ஒரு வருஷத்திய சந்தா தொகையை எப்போதாவது செலுத்தி, நூதன கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து, அவ்வருஷத்திய சஞ்சிகைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளலாம்.)

☞ கடிதங்கள் - சந்தா தொகைகள் முதலிய யாவற்றையும் மதராஸ் ஸ்கூல் புக் அண்டு வர்நாக்யுலர் லிட்டரேச்சர் ஸொஸைட்டி என்னும் பழைய காலேஜ் புஸ்தகசாலையின் காரியதரிசிக்கு அனுப்ப வேண்டியது.

14608

